விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 29 திங்கட்கிழமை (11.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 113

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்து கடற்படை முழு உஷார் நிலையில்!

## இராணுவப் புலனாய்வுத் தகவலையடுத்து கடற்படை வட்டாரங்களில் பரபரப்பு

(கொழும்பு)

கடல்ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் கடற்படைக் கப்பல்கள்மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் நடாத்தக்கூடும் என வெளியான உளவுத் தகவலையடுத்து இலங்கைக் கடற்படையினர் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இதனால் கடற்படை வட்டாரங்களில் பெரும் பரபரப்பு நிலவுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த 4 ஆம் திகதி இராணுவ உளவுத்துறை விடுத்த அவசர எச்சரிக்கை குறித்து இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் பாதுகாப்பு நிலைபரம் தொடர்பான தனது கட்டுரையில் வெளியிட்டிருக்கிறார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு அழைப்பிதழ் அனுப்பிய இத்தாலிய அரசு

(கொழும்பு)

நித்திய இளைபாற்றியடைந்த பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் இறுதி ஆராதனை நிகழ்வில் கலந்துகொள்வதற்கு இத்தாலிய வெளிவிவகார அமைச்சினால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்ததாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி இத்தாலிக்குச் சென்ற புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் மறுநாள் வெள்ளிக்கிழமை இத்தாலிய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுக்களை முடித்துக்கொண்டு நெதர்லாந்துக்குப் பயணமாகினர்.

மறுநாள் சனிக்கிழமை பாப்பரசர் காலமானார். இதனைத் தொடர்ந்து இத்தாலியிலுள்ள விடுதலைப் புலிகளின் பிரமுகர்களூடாக இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்ள விடுதலைப் புலிகளின் குழுவொன்றினை அனுப்ப கோரிக்கை விடுக்கப்பட்டது.

தொடர்ந்து இதற்கான அழைப்பிதழை இத்தாலிய வெளிவிவகார அமைச்சு அனுப்பியிருந்தது. பாப்பரசரின் இறுதிநிகழ்வில் தமிழீழ வரைபடத்துடன் கூடிய மலர்வளையம் வைக்கப்பட்டமை தெரிந்ததே.

இதேவேளை சுனாமி அனர்த்தத்தைத் தொடர்ந்து அரசின் கட்டுப்பாடுகளை மீறி இத்தாலியத் தூதுவர் கிளிநொச்சிக்கு வந்து விடுதலைப் புலிகளிடம் நேரடியாக உதவிகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-06)

## இந்தோனேசியாவில் நேற்று பூமியதிர்ச்சி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் நேற்றுப் பிற்பகல் 4.29 மணியளவில் பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்தப் பூமியதிர்ச்சி றிச்டர் அளவுமானியில் 6.8 ஆகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் கெப்புலுவ மெண்டலப் பகுதியில் இந்தப் பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இப்பூமியதிர்ச்சி தொடர்பாக சுனாமி அனர்த்த நிலையம் தக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக் கட்டமைப்புப் பற்றிப்பேச சொல்ஹெய்ம் மீண்டும் வருகிறார்

(கொழும்பு)

போர்நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு 3 வருடங்களின் பின்னர் மோதல்நிலை ஒன்று உருவாகி வருகிறதா என்ற அச்சத்தின் மத்தியில் சுனாமி நிதியுதவியை நியாயமான முறையில் பகிர்ந்துகொள்வதற்காக ஒரு பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்துவதற்காக நோர்வே

முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் ஏப்ரல் 18 ஆம் திகதி எரிக் சொல்ஹெய்ம் கொழும்புவந்து மறுதினம் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

வன்முறையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கிலிருந்து பின்னர் கிளிநொச்சிக்குச் செல்லவுள்

தமிழ்ச்செல்வனை சந்திக்கவுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவரும் தமிழ்ச்செல்வன் குழுவினர் ஏப்ரல் 17 ஆம் திகதி கொழும்பு திரும்பி ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சிக்குச் செல்வர். இதனைத் தொடர்ந்து ஏப்ரல் 20 ஆம் திகதி எரிக் சொல

## தில்லைக்கூத்தனுக்கு நாட்டுப்பற்றாளர் விருது

(கிளிநொச்சி)

மறைந்த தில்லைக்கூத்தனுக்கு தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் நாட்டுப்பற்றாளர் விருது வழங்கிக் கௌரவித்துள்ளார்.

தில்லைத்கூத்தன் என அழைக்கப்படும் இளையதம்பி நடராஜா கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

தமிழ்த்தேசியப் பணிக்குழுவின் தலைவராக பதவிவகித்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

மறுநாள் சனிக்கிழமை பாப்பரசர் கால கது.

(த-06)

## இந்தோனேசியாவில் நேற்று பூமியதிர்ச்சி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் நேற்றுப் பிற்பகல் 4.29 மணியளவில் பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்தப் பூமியதிர்ச்சி றிச்டர் அளவுமானியில் 6.8 ஆகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் கெப்புலுவ மெண்டலப் பகுதியில் இந்தப் பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இப்பூமியதிர்ச்சி தொடர்பாக சுனாமி அனர்த்த நிலையம் தக

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக் கட்டமைப்புப் பற்றிப்பேச சொல்ஹெய்ம் மீண்டும் வருகிறார்

(கொழும்பு)

போர்நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு 3 வருடங்களின் பின்னர் மோதல்நிலை ஒன்று உருவாகி வருகிறதா என்ற அச்சத்தின் மத்தியில் சுனாமி நிதியுதவியை நியாயமான முறையில் பகிர்ந்துகொள்வதற்காக ஒரு பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்துவதற்காக நோர்வே அனுசரணையாளர்கள் இறுதிநேர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் ஏப்ரல் 18 ஆம் திகதி எரிக் சொல்ஹெய்ம் கொழும்புவந்து மறுதினம் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

வன்முறையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கிலிருந்து பின்னர் கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளார். அங்கு அவர் நாடு திரும்பும் தமிழ்ச்செல்வனை சந்திக்கவுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவரும் தமிழ்ச்செல்வன் குழுவினர் ஏப்ரல் 17 ஆம் திகதி கொழும்பு திரும்பி ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சிக்குச் செல்வர். இதனைத் தொடர்ந்து ஏப்ரல் 20 ஆம் திகதி எரிக் சொலஹெய்ம் அரச தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார். (த-06)

## தில்லைக்கூத்தனுக்கு நாட்டுப்பற்றாளர் விருது

(கிளிநொச்சி)

மறைந்த தில்லைக்கூத்தனுக்கு தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் நாட்டுப்பற்றாளர் விருது வழங்கிக் கௌரவித்துள்ளார்.

தில்லைத்கூத்தன் என அழைக்கப்படும் இளையதம்பி நடராஜா கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

தமிழ்த்தேசியப் பணிக்குழுவின் தலைவராக பதவிவகித்த தில்லைக்கூத்தன் சிறந்த அரசியல் விமர்சகருமாவார். (ச-08)

# பிரிந்துசெல்லும் உரிமை தாய்வானுக்கு இல்லை

## இலங்கை அரசு அறிக்கை

(கொழும்பு)

சீனாவின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியே தாய்வான் என்று அரசு கருத்துத் தெரிவித்துள்ளது.

அரசு சார்பில் வெளியிட்ட அறிக்கையில், தாய்வான் எந்த வழிமுறையிலும் சரி தனிநாடு கோருவதை எதிர்ப்பதாகவும், சீனாவின் இறையாண்மையையும் பிரதேச ஒற்றுமையையும் பாதுகாக்க அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா - இலங்கை இராணுவ மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களுக்கு வலுசேர்க்கும் வகையில் தாய்வானின் பிரிந்துசெல்லும் நிலைப்பாட்டினை இலங்கை எதிர்த்துள்ளதாக கொழும்பு அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சீனப் பிரதமரின் இலங்கை விஜயத்தினைத் தொடர்ந்து இவ்வறிக்கை விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சிப்பாய் விடுதலை

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர் கிழக்கு சம்பூர் பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் நுழைந்தபோது புலிகளினால் கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் அளவில் மூதூரிலுள்ள அரசியல்துறை அலுவலகத்தில் வைத்துப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் ஒப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் விவகாரக்குழுவினர் ஞாயிறன்று நாடு திரும்புவர்

(கிளிநொச்சி)

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினர் எதிர்வரும் 17 ஆம் திகதி தாயகம் திரும்பவுள்ளனர்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவினர் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று சமாதானப் பேச்சு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாக சபையை வழங்கக்கோரி இன்று பேரணி

விடுதலைப் புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை வழங்கக்கோரி வவுனியாவில் இன்று மாபெரும் பேரணி நடைபெறவுள்ளது.

இந்தப் பேரணியை வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருக்கிறது. வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்திலிருந்து ஆரம்பமாகும் பேரணி வவுனியா நகரசபை மைதானத்தைச் சென்றடைந்ததும் அங்கு மாபெரும் கூட்டமொன்று இடம்பெறும். இறுதியில் மகஜர்கள் கையளிக்கப்படும்.

இப்பேரணி தொடர்பாக வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 3 வருடங்கள் நிறைவடைந்தபோதிலும் நிரந்தர சமாதானத்திற்கான முயற்சிகள் மந்த கதியிலேயே நடந்துவருகின்றன.

மாறாக மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுமோ என்ற பீதி மக்கள் மனங்களில் ஏற்பட்டுள்ளது. இடைக்கால நிர்வாகசபை, பொதுக்கட்டமைப்பு என்ற போர்வையில் பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் மக்கள் வாழ்விடங்கள், பொது நிறுவனங்கள் என்பன தொடர்ந்தும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-08)



# அரசியலில் ஈடுபடாத கட்சிகளின் பதிவுகளை இரத்துச் செய்வதற்கு தேர்தல் சட்டத்திற்கு வலுவில்லை

## தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

அரசியலில் ஈடுபடாத கட்சிகளின் பதிவுகளை இரத்துச் செய்வதற்குத் தற்போதைய தேர்தல் சட்டம் வலுவானதாக இல்லையெனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் பதிவு செய்யப்பட்ட 51 அரசியல் கட்சிகளில், கடந்த தேர்தலின் போது 47 வீதமான கட்சிகளே போட்டியிட்டன.

இலங்கையின் அரசியல் கட்சிகள் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் ஏற்பாடு செய்திருந்த சட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

செயற்படாதிருக்கும் அரசியல் கட்சிகளின் பதிவுகளை இரத்துச் செய்வதற்கு இன்று சட்ட முறைமையோ இல்லை.

51அரசியல் கட்சிகளில் கடந்த தேர்தலின் போது 47 வீதமான அரசியல் கட்சிகளே போடடியிட்டன. இவ்வாறு போட்டியிட்ட கட்சிகளில் குறைந்த பட்சம் ஒரு பாராளுமன்ற உறுப்பினராவது தெரிவு செய்யப்படும் அளவுக்கு 23.5 சதவீதமான கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டன.

1981 ஆம் ஆண்டு பாராளுமன்றத தேர்தல் சட்டம் கொண்டு வரப்படமுன்னர் தேர்தலில் போட்டியிடாத கட்சிகளை இரத்துச் செய்ய ஏற்பாடாகியிருந்தது.

அததுடன், தேர்தலில் போட்டியிடாத மற்றுமொரு வேட்பாளரை நிறுத்தாத அரசியல் கட்சிகளை இரத்துக் செய்வதற்கான சந்தர்ப்பம் அன்று இருந்தது. அவ்வாறு செயற்படாதிருக்கும் கட்சிகளை இரத்துச் செய்வதற்காகச் சட்டங்களை உருவாக்க வேண்டும்.

சுயாதீன ஆணைக்குழு வொன்றை அமைப்பதைத் தொடர்ந்தும் தாமதப்படுத்தக் கூடாது 17வது அரசியல் திருத்தத்தின் மூலம் சுயாதீன ஆணைக்குழுவை அமைப்பதற்கான காலம் குறிக்கப்படாமையினால் அதனைப் பயன்படுத்தி ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிப்பது தாமதிக்கப்படுகின்றது.

சுயாதீன ஆணைக்குழுவுக்காக ஐந்து உறுப்பினர்கள் நியமிக்கப்படவேண்டும். இந்த உறுப்பினர்களில் எவரினது பெயர்களுமே முன்மொழியப்படவில்லை. அவர்களின் பெயர்கள் ஜனாதிபதிக்கு முன் வைக்கப்பட்டு அரசியல் யாப்பு சபைக்கும் அனுப்பப்பட்டது.

இந்தப் பெயர்ப்பட்டியல் 2001 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 17 வது அரசியல் யாப்பு திருத்தததின் மூலம் அமைக்கப்பட்ட மற்றைய ஆணைக்குழுக்கள் நான்கும் தற்போது செயற்படுகின்றன.

ஆனால், தேர்தல் ஆணைக்குழு மட்டும் செயற்படவில்லை. இந்த அரசியல் யாப்பு திருத்தத்துக்கு அமைய தேர்தல ஆணைக்குழுவை அமைப்பதற்கான காலப்பகுதி குறிப்பிடப்படவில்லை அதனால் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார். (ற-8)

## சுனாமி நிவாரண நிதி குறித்து உலகவங்கி கணக்காய்வு ?

(கொழும்பு)

இலங்கையில் ஆழிப்பேரலையால பாதிப்புற்ற மக்களுக்கென வழங்கப்பட்ட நிவாரண நிதி குறித்து உலக வங்கி கணக்காய்வுகளை ஆரம்பித்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஒரு லட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வீதம் 4 மாத காலத்திற்கு வழங்குவதற்கான தொகையை உலகவங்கி இலங்கைக்கு வழங்கியுள்ளது.

எனினும் இந்தத் தொகையை 2 இலட்சம் குடும்பங்களுக்கு பகிர்ந்தளித்ததினால் 4 மாதத்திற்கான தொகைநிதி 2 மாதங்களிலே முடிவடைந்துவிட்டது.

உலக வங்கியினால் மதிப்பீடு செய்யப்பட்டதற்கு மாறாக 2 இலட்சம் குடும்பங்களுக்கு இந்த நிதியை பகிர்ந்தளித்துள்ளமையில் ஏதேனும் முறைகேடு நடந்துள்ளனவா? என்பது குறித்து ஆராய்வதே கணக்காய்வின் நோக்கம் எனத் தெரிவிக்கபட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுள் நிவாரணம் தேவைப்படுபவாகள் மட்டுமல்லாமல் நிவாரணம் தேவைப்படாதவர்களும் இந்த நிதியை பெற்றுள்ளனரா? என்று இங்கு ஆராயப்படவுள்ளது.

அரசின வீடமைப்பு திட்டங்களும் சர்வதேச ரீதியில் விமர்சனஙகளுக்கு இலக்காகியுள்ளது.

இதேவேளை அம்பாந் தோட்டை மாவட்டத்தில் ஆழிப்பேரலையால்சுமார்2 ஆயிரத்து 800 வீடுகள பாதிக்கப்பட்டிருக்க அங்கு 6 ஆயிரம் வீடுகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டமை குறித்து சர்வதேச ரீதியில் விசனமும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளது. (க-9)

## இராசி பலன்

11.04.2005
(பங்குனி 29, திங்கட்கிழமை)
பரணி நண்பகல் 11.58 மணிவரை
திருதியை பின்னிரவு 2.00 மணிவரை
இராகுகாலம் 07.36 - 09.06 மணிவரை
சுபநேரம் 12.06 -01.36 மணிவரை
கார்த்திகை விரதம்

| | |
|---|---|
| மேடம் | தொழில் ஆர்வம், காரியஅனுகூலம், புதிய தகவல், தெய்வசிந்தை. |
| இடபம் | சுபசெலவு, காரியதாமதம், ஆரோக்கியக் குறைவு, உறவினர் வெறுப்பு. |
| மிதுனம் | தொழில் முன்னேற்றம், கீர்த்தி, புதியபொருள் சேர்க்கை, நல்லகாரியம். |
| கடகம் | உற்சாகம், நண்பர்கள் உதவி, காரிய அனுகூலம், செல்வாக்கு. |
| சிங்கம் | சரீரபிரயாசை, தேசாந்திரவாசம், அமைதிக் குறைவு, புதிய முயற்சி. |
| கன்னி | காரியதடங்கல், மனக்கிலேசம், போசன சுகம், ஆரோக்கியக் குறைவு. |
| துலாம் | உறவினர் வருகை, காரிய நன்மை, நல்ல சம்பவம், விருந்துபசாரம். |
| விருச்சிகம் | பிரயாண சுகம், கௌரவமான நிலை, உடல்நலம், காரிய அனுகூலம். |
| தனுசு | முயற்சி தாமதம், உறவினர் மனஸ்தாபம், போசன சுகக்குறைவு, வியாபாரவிருத்தி. |
| மகரம் | காரியதாமதம், தொழில் ஆர்வம், புதிய செய்தி, சயனசுகக்குறைவு. |
| கும்பம் | பிரயாண நன்மை, ஜனவசியம், செய்தொழில் விருத்தி, நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | அதிகசெலவு, நிலைமாற்றம், வீண்வார்த்தை, காரியதாமதம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
-வளவன்

## சமுர்த்தி முகாமையாளர் ஒன்பது பேர் நியமனம்

(தனங்கிளப்பு)

பரீட்சை நடாத்தப்பட்டு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட பட்டதாரி சமுர்த்தி உத்தியோகத்தர்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 9 பேருக்கு சமுர்த்தி முகாமையாளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் பணிபுரிந்த ரி.பகீரதன், எஸ்.பிரதீபன் ஆகியோரும் கரவெட்டி பிரதேச செயலகத்தில் பணிபுரிந்த பி.குகதாசன், எஸ்.விஜயந்தி ஆகியோரும் யாழ்.மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் பணிபுரிந்த என்.மோகனேசன், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பணிபுரிந்த ஆர்.பிலோமிளா பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பணிபுரிந்த எஸ். உதயமதி ஆகியோர் வவுனியா மாவட்டத்திற்கும்.

கரவெட்டி பிரதேச செயல்கத்தில் பணிபுரிந்த ஈ.ராஜ்பவன், டி, சிவவாணி ஆகியோர் திருகோணமலை மாவட்டத்திற்கும் சமுர்த்தி முகாமையாளர்களாக நியமிக்கீப்பட்டுள்ளனர். (7-37)

## தீவகக் கல்வி வலயத்தில் பதவி வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) பதவிகளுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இலங்கை ஆசிரிய சேவை தரம் 1, தரம் 2.1 ஐச் சேர்ந்த தகுதியானோரிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தீவகவலயத்தில் கடமையாற்றுவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்களை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு முகவரியிட்டு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தீவகவலயத்தில் ஒப்படைக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வே.மகேந்திரன் கேட்டுள்ளார். (ற)

## பட்டம் வழங்கல்

(சாவகச்சேரி)

வடமராட்சிப் பகுதிகளில் சமயச்சொற்பெழிவுகளை நிகழ்த்துவதில் முன்னணிவகிககும் சொற்பொழிவாளரும். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியருமாகிய ஆறுமுகம் சிவநாதனின் சொற்பொழிவு திறமையைப் பாராட்டி கரவெட்டி யாக்கரு விநாயகர் தேவஸ்தான சபையினர் "கதாகான வாரிதி" எனும் பட்டத்தினை வழங்கியுள்ளனர்.

ஆலயத்தில் அண்மையில் இடமபெற்ற நிகழ்வில் பிள்ளைக்கவி வ.சிவராசசிங்கமும, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசனும் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரைகளை வழங்கினர். (7-101)

## அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் ஊழியர்களின் எண்ணிக்கை முனனைய வருடங்களிலும் பார்க்க இந்த வருடம் பெரிதும் அதிகரித்துள்ளது.

சராசரியாக 15 ஆயிரத்திற்கும் 16 ஆயிரத்திற்கும் இடைப்பட்ட எணணிக்கையினர் அரசசேவையிலிருந்து ஓய்வுபெற்று வந்திருக்கின்றார்கள் என ஓய்வூதி யத திணைக்களம் அறிவித்துள்ளது,

ஆனால் இந்த வருடம் இளைபபாறும் ஊழியர்களின் எண்ணிக்கை 20 ஆயிரமாக அதிகரித்துள்ளது என்று திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

அரச துறையிலிருந்து பெருமளவு ஊழியர்கள் இளைப்பாறுவதற்கு சம்பள அதிகரிப்புடன் ஓய்வூதியத்தையும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கையும் ஒரு காரணம் என ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் சேவையில் சேர்ந்து கொள்ளாமல் சேவையிலிருந்து இளைப்பாறுவதற்கு ஊழியர்கள் விரும்பியமையும் மற்றுமொரு காரணமாகும்.

ஊழியர்கள் கடமையாற்றிய சேவைக் காலத்தில் 55 வயதாகும் போது சேவையில் மேலும் 5 வருடங்கள் அதிகரித்து கணிக்கப்படுவதனால் 57 வயதிலேயே ஊழியர்கள் இளைப்பாற முன்வந்துள்ளமை மூன்றாவது காரணமாகும். என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் புடவை கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் சேவையாற்றும் 3 ஆயிரம் ஊழியர்களுக்கு இளைப்பாற்று நலன்களை வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (க-9)



அண்மையில் நடைபெற்ற நல்லூர் ஆனந்த வித்தியாலய விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.கல்விவலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி த.பிரகதீஸ்வரசர்மா வித்தியாலய விளையாட்டுச் செயலர் ஆசிரியை க.பிரியதர்சினி ஆகியோர் விழா மேடையில் அமர்ந்திருப்பதையும் வித்தியாலய அதிபர் ஆ.சிவராசா தலைமையுரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

(படம்: அல்லைப்பிட்டி நிருபர்)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# நொடிந்து போயிருந்த அரசாங்கத்திற்கு வற்றாத ஊற்றான சுனாமி நிவாரண நிதி

கொழும்பு அரசியல் இப்போது சுனாமி நிவாரண பொதுக கட்டமைப்பைச் சுற்றி மையங் கொணடிருக்கிறது. சுனாமி நிவாரண நிதி நொடிந்து போயிருந்த அரசாங்கத்திற்கு வல்லமை மிக்க ஊற்றாகவும், அதன் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் பாத்திரத்தை வகிப்பதாகவும் இருப்பதனால் அதன் கூட்டணி மற்றும் உட்கட்சி அரசியல் பிணக்குகளையும் தாண்டி பொதுக்கூட்டமைப்பைச் சுற்றி அரசியல் மையங்கொள்ள வேண்டியதாயுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் சுனாமி நிவாரண நிதியைச் சமாதானத்தை நோக்கி அரசை முன்தள்ளுவதற்கு வாய்ப்பானதொரு ஆயுதமாகப் பயன்படுத்தியிருந்த சூழலில், சுனாமியினால் ஏற்பட்ட மனிதாபிமான சர்வதேச நிதிவரவு, சமாதானத்தைத் தடம்புரட்டி விடக்கூடாது என்பதில் விடுதலைப்புலிகள் அதிக சிரத்தை கொள்ளவேண்டியவர்களாக உள்ளார்கள். அத்துடன் சுனாமியால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு -கிழக்கு மக்களுக்கு நியாயபூர்வமாக இவ் உதவிகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய அரசியல் கடமைப்பாடுள்ளவர்களாகவும் உள்ளார்கள்.

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்பை அரசாங்கம் மறுதலித்திருக்கிறது. அனுசரணை நாடான நோர்வே அரசு தனது அனுசரணைப் பாத்திரத்தின் கடமை வழிப்பட்டு ஒரு பொதுக் கட்டமைப்பு வரைபைப் பொதுவில் முன்வைத்தது. இதில் சில குறைபாடுகள் இருந்தபோதிலும் தமிழ் மக்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் அரசியல் தகைமை அங்கீகரிக்கப்பட்டும், நியாயபூர்வமாக வட - கிழக்க மக்களுக்கு நிதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான வழிவகைகள் இருப்பதையுமிட்டு விடுதலைப்புலிகள் அதன குறைகளை முன்னிறுத்தாமல் சமாதானத்திற்குச் சாதகமாக அதனைப் பரிசீலித்து ஏற்றுக்கொண்டனர்.

ஆனால், அரசாங்கம் இது விடயத்தில் இணங்கிவர மறுக்கிறது. பொதுக்கட்டமைப்பில் விடுதலைப்புலிகளை மறுதரப்பாகக் கொள்ளும் அரசியல் தகைமையை மற்றும் சொற்பிரயோகஙகளைக் கூட ஜீரணிக்க அரசாங்கத்தால் முடியாதுள்ளது. சமாதானததிலும் இந்த மனோபாவமே மிக முககிய உள்ளார்ந்த பிரச்சினையாக இருக்கிறதெனலாம்.

இலங்கைத் தீவில் முன்னெப்போதும் நிகழ்ந்திராத ஓர் இயற்கை அனர்த்தத்திற்கு உளளான மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையில் தற்காலிகமானதும் மனிதநேயம் மிக்கதுமான இந்த விடயத்தில் கூட, தமிழ் மக்கள் ஒரு அரசியல் தகைமையை பெற்றுவிடுவார்கள் என்ற அச்சம் கருதி, ஒரு பொதுக்கட்டமைப்புக்கு இணங்கி வர மறுக்கும் அரசாங்கம் இன முரண்பாடடிற்கான இறுதித்தீர்வு குறித்த அரசியல் தளத்தை எவ்வாறு ஜீரணித்துக்கொள்ளும்?

யதார்த்தத்திற்கு அபபாலானவர்களுடன் சமாதானம் செய்ய முயறசிக்கும் காரியம் எவ்வாறு கைகூடும். கடந்த மூன்று தசாப்தததிற்கும் மேலாக அமைதி, பாதுகாப்பு, முன்னேற்றம் ஆகியவற்றை அடைவதற்கான கடினமான ஆனால உத்வேகம்மிக்க ஆயுதப்போரை தமிழ்மக்கள் நடத்தியிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளுக்காகப் போராடியவர்களையும், தியாகங்கள் புரிந்தவர்களையும், அவர்களது நலனகளை சாத்தியமான அனைத்து வழிகளிலும் பாதுகாத்தவர்களையுமே தமது சட்டபூர்வ பிரதிநிதிகளாகக் கொணடுள்ளார்கள். கடந்த பொதுத்தேர்தலில் விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதித்துவமாகக்கொண்ட தமிழ்க் கூட்டமைப்புக்கு வாக்களித்து சர்வதேசத்திற்கு ஜனநாயக வழிமுறையில் இதை வெளிப்படுத்தியுமுள்ளனர்.

தமிழ்மக்கள், வலிமை பொருந்திய ஒரு ஆயுதபடைக் கட்டமைப்பை மட்டும் கொண்டிருக்கவில்லை. மாறாக, தமக்கான நிர்வாக அமைப்புக்களை தனித்துவமாகக் கட்டிவளர்ப்பதிலும் முன்னேறி வந்துள்ளனர். கடந்த கால் நூற்றாண்டில் இவர்களது வாழ்வில் காத்திரமான் பின்தள்ளமுடியாத முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தமிழர்களின் சில நகரங்கள் சிங்களப் படைகளிடமிருந்து இனனும் விடுவிக்கப்படாத போதும் தமிழ்மக்கள் தமக்கான அரசியல் தளத்தைத் தனித்துவமாக உருவாக்கியிருக்கின்றனர்.

தமிழ் மக்களைச் சிங்கள அரசாங்கம் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. தமிழ் மக்களின இறைமைககுச் சொந்தம்கொண்டாடவும் முடியாது. தமிழ் மக்களின் இந்த அரசியல் தகைமைகளை அங்கீகரிக்காமல் சமாதானம் செய்வது சாத்தியமில்லை என்பதை சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்வதாயில்லை. ஒடுக்குமுறைச் சித்தாந்தத்தின் வழிபபட்டு சமாதானத்தை அணுக முயல்கிறார்கள். சூழ்ச்சி வலைகளை நெய்வதில் ஆர்வம் காட்டுகிறார்களே தவிர இயல்புச் சூழலை உருவாக்க மறுக்கிறாகள். வலுச்சமநிலையைத் தமக்குச் சாதகமாக மாற்றியமைக்க சமாதானத்தைப் பயன்படுத்தும் உள்நோக்கத்தைக் கைவிட அவர்கள தயாராகவில்லை. சிங்கள அரசாங்கத்தின் பிடிவாதமான, உறுதியான இந்த மனோபாவத்தில் மாற்றங்களில்லை. அமைதியும நாகாிகமும் நிறைந்த சூழலைப படைக்க இவர்களிடம் நேர்மையுமில்லை. துணிச்சலுமில்லை.

அமைதியும், பாதுகாப்பும், முன்னேற்றம் நிறைந்த வாழ்விற்கு தமிழ்மக்கள் அவாவும் அதேவேளை இத்தீவில் அமைதியும் சமாதானமும் நிலவ சர்வதேச சமூகம் ஆர்வம் கொண்டிருப்பதை தமிழமக்கள் கண்டு கொண்டார்கள். நாகரிகமான முறையில் சமாதானத்தைப் படைக்கவும், சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்படவும், திறன் மிக்க அதன் ஒத்துழைப்பைப் பெற்றிடவும தயாராகவே தமிழ் மக்கள் இச்சமாதானத்தில் நம்பிக்கைகொண்டனர். ஆனால், மூன்று வருடமாகியும் சமாதானத்தின் நலன்கள் தமிழ்மக்களை வந்தடையவில்லை.

இத்தகைய வெறுமைக்கும் நிரந்தரத் தீர்வென்ற மிகமிகத் தொலைவுக்குமிடையே ஒரு பாதுகாப்பான நம்பிக்கைமிக்க தளம அமைக்காமல் யுத்தத்தைத் தவிர்க்க இயலாது என்பதைப் புலிகள் புரிந்துகொண்டுள்ளனர். இதன் பொருட்டே இடைக்காலத தன்னாட்சி அதிகாரசபையைக் கோரினர். யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீர்த்துப்போகாமல் இருப்பதற்கு இடைக்காலத் தன்னாடசி அதிகாரசபையால் வலலமை வழங்கமுடியும். இன முரண்பாடு உலகில் புதுமையானது அல்ல. அதன் தீர்வுக்கான அணுகுமுறையும் உலகிற்கு புதுமையானதல்ல. 'விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டைச் சர்வதேச சமூகத்தால் புரிந்துகொள்ளமுடியும்.

இதனை ஓரளவு புரிந்து கொணட உதவி வழங்கும் நாடுகள் சிங்கள அரசை சமாதானத்தை நோக்கி முன்தள்ளுவதற்கு தமது சக்திமிக்க செல்வாக்கை அரசு மீது செலுததினர். ஆனால் சுனாமிக்கான மனிதாபிமான நிதி சிங்கள அரசாங்கத்தை சமாதானம் தவிர்ந்த பாதையில் முன்னேற வழிவகுக்கக்கூடிய ஆபத்தே இன்று நிலவுகிறது.

எனவேதான் நிவாரண நிதிக்கான பொதுக்கட்டமைப்பை விடுதலைப்புலிகள் கோரவேண்டியுள்ளது. இது இன்றைய பதட்டமான அச்சம்தரும் சூழலுக்கும இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை உருவாக்கத்திற்கும் இடைத்தளமாக அமையக்கூடியது. நலிவடைந்து கொண்டிருக்கும் ஒப்பந்தத்திற்கு ஊட்டம் வழங்க வல்லது.

மாறாக, இதுவும் அடையப்பொறதுவிடின் தமிழ்மக்கள் நம்பிக்கை இழப்பதோடன்றி, சூழுகின்ற அச்சம் தரும் பதட்டமான நிலைமைகளுக்கு எதிர்வினை காட்ட முனைவர். வெகுசன மட்டத்தின் இந்த அழுத்தத்திற்கும் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு விடுதலைப்புலிகளுக்கு உருவாகும். இது சமாதானத்தை மேலும் தொடர்வதற்கு எந்த விதத்திலும் வாய்ப்பளிப்பதாக இருக்காது போகலாம்.

இவ் அச்சம் தரும் சூழலைத் தவிர்க்க சர்வதேச சமூகம் பயனுள்ள திறன்மிக்க பொருத்தமான அழுத்தத்தைப் பிரயோகிக்குமானால் யுத்தநிறுத்தம் வலுப்பட வாய்ப்புண்டு. அல்லாதவிடத்து எதிர்மாறான அரசியல் நிகழ்வுகள் நடந்தேறுவதைத் தடுத்து நிறுத்துவது கடினம்.

இப்போது யுத்தநிறுத்தம் விடுதலைப்புலிகளைச் சூழும வெகுசன அழுத்தத்திற்கும், சந்திரிகாவைச் சூழக் கூடிய சர்வதேச அழுத்தத் திற்குமிடையில் ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

*-இணையப் பார்வை*

## மனித உரிமைகள் விழிப்புணர்வை ஏற்படுத்த இராணுவத்தினருக்கு அறிவூட்டல் வகுப்புக்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவத்தினருக்கு மனித உரிமைகள் தொடர்பான விழிபபுணர்வை ஏற்படுத்தும் வகையில் சமூக் விழுமியங்கள் பற்றிய அறிவூட்டல் வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்டு வருவதாக வருகின்றது.

இதுவரை பொலிஸாருககான 14பயிற்சிப்பட்டறைகளை நடத்தியிருககும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த வாரம் யாழ். பொலிஸ் நிலையத்தில் இவ்வாறான பயற்சிபபட்டறையை நடத்தியது. இவற்றுடன் யாழ். சிறைச்சாலை பணியாளர்களுக்கும் அரசியல்கட்சிப் பிரதிநிதிகளுக்கும் மற்றும் மனித உரிமைகளுடன் தொடர்புடைய அமைப்புகளுக்கும் இதுபோன்ற பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்படவுள்ளன என்றும் சந்திரசேகர மேலும் தெரிவித்தார். (க-9)

## குறைகேள் அரங்கு

### சபிக்கப்பட்ட சனங்களின் பாவப்பட்ட பாதை

இடையிடையே இருபுறமும் முட்புதர்கள், மண்டி வளர்ந்து இடறி விழுத்தும் கற்களும் கிடங்குகளுமாய், ஆங்காங்கே ஒடுங்கி சமச்சீரற்று விளங்கும் புராதனமான கிரவல் ஒழுங்கையே செம்பிகலட்டி ஒழுங்கை. இது, இடைக்காடு கிராம அலுவலர் பிரிவின் பிரதான தெருவிலிருந்து தம்பாலை கதிரிப்பாய், வளலாய் கிராம அலுவலர் பிரிவுகளை ஊடறுத்துச் செல்லும், குறிப்பாக விவசாயிகளின் அதிக நடமாட்டமுள்ள குறுக்கு வீதியாகும்.

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை அச்சுவேலி உப அலுவலகத்தின் பராமரிப்பு உரித்துப்பெற்ற இந்த ஒழுங்கையானது எமது

# மனித உரிமைகள் விழிப்புணர்வை ஏற்படுத்த இராணுவத்தினருக்கு அறிவூட்டல் வகுப்புக்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவத்தினருக்கு மனித உரிமைகள் தொடர்பான விழிபபுணர்வை ஏற்படுத்தும் வகையில் சமூக் விழுமியங்கள் பற்றிய அறிவூட்டல் வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்டு வருவதாக குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ஆர்.ருவான் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் என்பது குறப்பாக சிறுவர்களது உரிமைகள் தொடர்பாகவும் படைத்தரப்பிற்கும் ஏனையவர்களுக்கும் புரிநதுகொள்ளவைப்பதே ஆணைக்குழுவின் இப்பயிற்சிப்பட்டறைக்கான நோக்கம் என்றும் சந்திரசேகர தெரிவித்தார்.

படைத்தரப்பை தவிர்த்து குடாநாட்டில் நிலைகொண்டுள்ள பொலிஸாருக்கும் மனித உரிமைகள் மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் மனித உரிமைகள் ஆணைக்குழு செயற்பட்டு வருகின்றது.

இதுவரை பொலிஸாருககான 14பயிற்சிப்பட்டறைகளை நடத்தியிருககும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த வாரம் யாழ். பொலிஸ் நிலையத்தில் இவ்வாறான பயற்சிபபட்டறையை நடத்தியது. இவற்றுடன் யாழ். சிறைச்சாலை பணியாளர்களுக்கும் அரசியல்கட்சிப் பிரதிநிதிகளுக்கும் மற்றும் மனித உரிமைகளுடன் தொடர்புடைய அமைப்புகளுக்கும் இதுபோன்ற பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்படவுள்ளன என்றும் சந்திரசேகர மேலும் தெரிவித்தார். (க-9)

# மயிர்கொட்டித் தாக்கத்தால் காரைநகரில் பலர் பாதிப்பு

காரைநகரில் மயிர்க்கொட்டியின் தாக்கத்தினால் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில சிகிச்சை பெற்றுள்ளனர்.

மயிர்க்கொட்டியுடன் கூடிய இலைகளை உட்கொண்ட இரு ஆடுகள் இறந்துள்ளதோடு ஒரு மாடு மயக்கமடைந்துள்ளது. இதனால் காரைநகரை விட்டு பொதுமக்கள் இடம்பெயரும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகரில் சுனாமி அனர்ததத்திறகுப் பின்னர் என்றுமில்லாதவாறு மயிர்க்கொட்டிகள் பெருகியுள்ளன.

இதனால் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படடுள்ளது. வீடுகள், கடைகள், அலுவலகங்கள் எல்லாவற்றிலும் மயிர்க்கொட்டிகள் அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வீதிகளில் மரங்கள் மூலம் இறங்கும் மயிர்க்கொட்டிகள் பாதசாரிகள், வாகனங்களில் செல்வோர் போன்றோர்களின் கண்களில் பட்டதால் பலா் காரைநகா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று மேலதிக சிகிச்சைக்காக யாழ்.பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மயிர்க்கொட்டியின் அதிகரிப்பினைக் கட்டுப்படுத்த முடியாதநிலையில் எந்த அரச அதிகாரிகளோ அல்லது பொது அமைப்புக்கள் எதுவும் இன்றுவரை முன்வரவில்லை.

இந்நிலை தொடருமானால் பொதுமக்கள் பலரும் இடம்பெயரும் நிலைமை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக காரைநகர் பிரதேச செயலகத்தில் பொதுமக்கள முறைப்பாடு செய்துவருவது குறிப்பிடத்தக்கது. (க,7-246)


## விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக் ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிசன், சீகோ கைமணிக்கூடுகளையும், சுவாமணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக் கொள்ள

**நியூ சிற்றி ரேடர்ஸ்**

**குளத்துக்கு முன்பாக, 135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். T.P: 222 3226**


# சபிக்கப்பட்ட சனங்களின் பாவப்பட்ட பாதை

இடையிடையே இருபுறமும் முட்புதர்கள், மண்டி வளர்ந்து இடறி விழுத்தும் கற்களும் கிடங்குகளுமாய், ஆங்காங்கே ஒடுங்கி சமச்சீரற்று விளங்கும் புராதனமான கிரவல் ஒழுங்கையே செம்பி கலட்டி ஒழுங்கை. இது, இடைக்காடு கிராம அலுவலா் பிரிவின் பிரதான தெருவிலிருந்து தம்பாலை கதிரிப்பாய், வளலாய் கிராம அலுவலா் பிரிவுகளை ஊடறுத்துச் செல்லும், குறிப்பாக விவசாயிகளின் அதிக நடமாட்டமுள்ள குறுக்கு வீதியாகும்.

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை அச்சுவேலி உப அலுவலகத்தின் பராமரிப்பு உரித்துப்பெற்ற இந்த ஒழுங்கையானது எமது நினைவறிந்த காலத்திலிருந்து எவ்வித புனரமைப்பிற்கும் உட்படுத்தப்படவில்லை. சிரமதானப் பணிகள் மூலமாக ஓரளவிற்கேனும் எப்போதோ இதனைச் செப்பனிட்டிருக்கலாம்தான்! இந்தக குறுக்கு ஒழுங்கையின் இரு அந்தத்திலும் செயல்திறன் வாய்ந்த இரு சனசமூக நிலையங்கள், இயங்கிக்கொண்டிருப்பினும் இது கைகூடவில்லை. ஒரு சிலரது அடாத்தான, தான்தோன்றித்தனமான வீதியோர எல்லை ஆக்கிரமிப்பும், கணிசமானோரின் அப்பட்டமான சுயநலன் சார்ந்த ஒத்துழைப்பின்மையும் இடையூராய் அமைந்திருந்ததே முக்கிய காரணம். கவனித்துக் கருமமாற்ற வேண்டிய உள்ளூராட்சி சபையும் முறையீடுகளை உதாசீனம் செய்து வருவது வழமையாகிப்போனது.

மிக அண்மையில், இரு வாகனங்கள் விலத்தி வழி வட்டுச் செல்லஇயலாத, குறிபபிட்ட சில இடங்களில் தனியொரு பாரவூர்தி நகரமுடியாது செருகித் தரித்துவிடக்கூடிய இந்தக் குறுகிய ஒழுங்கையில், பொறுப்பற்ற விதத்திலும் பொது நலன்களைப் புறந்தள்ளியும் போக்குவரத்துத் தடத்திலேயே மின் கம்பங்கள் நிறுத்துவதற்கான இரு குழிகள் அகழப்பட்டன.

இதற்கான ஆட்சேபணை உடனடியாக உரியவிதத்தில், உரித்துடைய பிரதேச சபை அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அவர்களும் வந்து போனார்கள்; இவர்களும் போய் வந்தார்கள். ஆனால் தற்போது அதே இடங்களில் கம்பங்கள் நிறுத்தப்பட்டும் விட்டன.

“கூடிய விரைவில் வீதி விசாலிக்கப்படும்போது நிறுத்திய மின்கம்பங்களைப் பின் நகர்த்திக்கொள்ளலாம்” என்றவாறான சமரசம், பிரதேச சபை செயலாளருக்கும், மின்சாரசபை பொறியியலாளருக்கும் இடையில் ஏற்பட்டுள்ளதாக அறிய முடிந்தது. எழுத்து மூலம் அல்லாத இக்கூற்று நடைமுறைச் சாத்தியமானதா? அல்லது ஏப்ரல்-1 தான் தொடர்ந்துவரும் நாள்களா? எம்முள் எழுந்திருக்கும் ஐயங்கள் இவை.

**பாவப்பட்ட பாதையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும சபிக்கப்பட்ட சனங்கள்.**

## சீறி எழுந்த சிறுபுயலே...

புதுயுகம் படைக்க
புறப்பட்டு விட்ட
புதுமைப் பெண்ணே...!
சீறி எழுந்த
சிறு புயலே...!
சிறு புன்னகையாலா
சீறும் பாம்பை
சிறைப்பிடித்தாய்?

வீ.நிமல்,
மீசாலை.

## சாதனை(யா)!?

சாதனைகள் பல வென்றுள்ளோர் ஆண்களா?
சற்று யோசியுங்கள்...
வேதனைகள் பல சுமப்பவள் பெண்ணா??
வேடிக்கையாயில்லையா???
பேதமை நீங்கி பாரினிலே - பாரதி கண்ட
புதுமைப் பெண்ணா இவள்!
பதுமை இவள் சாதனை நிலைநாட்ட
படையே அஞ்சும் பாம்புடனா
சாகசம் புரிகின்றாள்?

பொ. புனிதன்,
வரியப்புலம்.

## பாவை உள்ளம்

பார் போற்றிடவே
பாரினிலே வாழவேண்டிய பாவையோ
பசிப்பிணி வருத்திடவே
பத்தும் பறந்த நிலையில்
பாதி வயிற்றை நிரப்புவதற்காக
பாம்பை வைத்துப் பிழைக்கின்றாள்.

க.சுகிரதன்,
சங்கானை.

## பாம்பை பிடித்து...

பாம்பு என்றால்
படையும் நடுங்கும் - ஆனால்
பார்ப்பவர் நெஞ்சை
திகிலுறவைக்கும்
பாம்பைப் பிடித்து
பகிடி போல் விளையாடும்
பக்குவம் அறியாப்
பாவையின் துணிச்சல்
வியக்கத்தக்கது!

த.நா.பிள்ளையார்,
மூளாய்.

# மௌனத்தின்



## வீரப் பெண்ணே...!

வீறு கொண்டெழுந்த
வீரப் பெண்ணே....!
நம்பிக்கை மட்டும்
நம் கையிலிருந்தால்
நஞ்சு கூட
அமுதமாகுமென்கிறாயா...?

பா.சத்யா,
மீசாலை.

# தேடல்கள் -54

## அன்றும் இன்றும்

அன்று அடுப்பங்கரையில் ஒதுங்கி
அடிமையாக வாழ்ந்த பெண்
இன்று குறும்புப் புன்னகையுடன்
பாம்பினைப் பிடித்து
சாகசம் செய்கிறாளே!
நீதான் பாரதி கண்ட
புதுமைப் பெண்ணா?

S. கஜசங்கவி,
இணுவில்.

## பசித்த வயிறு

பள்ளி செல்லும்
பாலர் பருவமதில்
பராமரிப்பார் யாருமில்லை
பசித்தவயிற்றை நிரப்ப
பாலகர் நமக்கு
சாகசம் தான் வழி அதனால் தான்
படையே நடுங்கும் பாம்பை
பயமின்றி வைத்திருக்கிறேன்.

நிகா,
உடுவில்.

# மௌனத்தின் தேடல்கள் -56



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை மிகச் சிறிய கவிதைகளாக்கித் தபால் அட்டையில் வலம்புரி - சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

கிடைக்கவேண்டிய இறுதித் திகதி - 18.04.2005

அனுபவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள்- 56

வலம்புரி - சங்குநாதம்
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.




## பார்த்திப ஆண்டே பாங்காக வாழவை

தாங்கொணாத் தொல்லை தந்த
தாரணத் தாள் போகின்றாள்
பாங்காக வாழ வைத்தாள்
பார்த்திப ஆண் டென்று
நாங் காண நல்லவற்றை
நம் முன்னே நடத்தி வைத்து
திங் ககற்றித் தீர்வினைத்
தந்திடம்மா தாயே நீ!



*கவிமணி அன்னைதாஸன்,*
*உரும்பிராய்.*

## தமிழீழம் மலர்ந்திட வா!

புத்தாண்டே! புதுவரலாறு படைக்க வா!
பிரிந்த உறவுகள் இணைந்திட வா!
ஏழைகளின் துயரை நீக்கிட வா!
ஏழைகளின் வறுமையைப் போக்கிட வா!
தமிழரின் அவலவாழ்வைத் துடைத்திட வா!
அடிமை வாழ்வின் இருளை அகற்றிட வா!
வீழ்ச்சியில்லாத வாழ்வை
தமிழருக்குக் கொண்டுவா!
நல்ல வல்ல தலைவரை நம்பி வா!
ஈழமண்ணுக்கு நல்லதைக் கொண்டு வா!
தமிழீழம் மலர்நதிட வா...!



*யோ.யூட் நிமலன்,*
*காந்தரூபன் அறிவுச்சோலை.*

## ஏக்கம்

என்றோ ஒருநாள்
நிச்சயம்
நிகழப்போகும் - அந்த
நிகழ்வு இன்றே
நடந்தால்...!

ஒன்றாய் கூடுவர் - மிக
நன்றாய் பேசுவர்
மாலை சூட்டுவர்
மஞ்சளும் அரிசியும் கலந்து தூவுவர்

ஒருயிர் துடிக்கும் - இனி
இவனில்லையே பதைக்கும்
தாங்கியவள் வயிறும் துடிக்கும்
தூக்கியவன் நெஞ்சம் வெடிக்கும்

பட்டுக் கட்டுவர் - சந்தன
பொட்டுமிட்டு பூவும் தூவுவர்
எட்டுக் கட்டையும் கேட்க
மேளம் கொட்டி முழங்குவர்

தெய்வமென்று சிலர்
கை தொழுவர்
தெய்வமே... என்று சிலர்
மனம் நோவர்

நாலுபேர் தோள்களில்
நாயகன் ஊர்வலம் நடக்கும்
பாலூற்றிக் காடாத்த
எல்லாம் முடியும்!!

இவ்வளவும் எனக்கும்
நடக்கும் - பின்
எவ்வளவு காலம்
என் நினைவு வாழும்...?

*நெற்கொழுதாசன், வல்வை*

## பூ

எல்லா உயிர்களுக்கும்
பிடித்தமான அழகான
சிறு கவிதை!

## மனம்

நினைவுகளை
சேமிப்பு கணக்கிலிட்டு
வட்டியாக உணர்வுகளை
வழங்கும் வங்கி!

*கு.தாட்ஷாயினி, கலட்டி.*



## சித்திரைப் பிறப்பே தருக விடுதலை!

சிறகுவிரித்து சிரித்துவரும் சித்திரையே!
சற்று நின்று எம் நிலை கேளாயோ?
மௌனவிருளில் மூழ்கி
துன்ப நதியில் நித்தம் நீந்துகின்றோம்
சுதந்திரக்காற்றை
சுவாசிக்க ஏங்குகின்றோம்
உறவுகளைப் பிரிந்து வாடுகின்றோம்
தேற்றவும் எவருமில்லை
சமாதானப் பூங்காற்று
சந்தோஷ நறுமணம் வீசுகின்றது
எம் தீவில்!
எமை மட்டும் புறந்தள்ளி...
நாங்களென்ன சமாதானப் பூந்தென்றல்
தீண்டத்தகாதவர்களா?
வெண் தாமரையென
வெண்புறாவுடன் கோஷமிட்டவர்கள்
இறுதியில் வெண்புறாவின்
சிறகினில் தீயிட்ட
சரித்திரக்கதை மறையும் முன்பே
மீண்டும் வெண்புறாவுடன்
இன்று!
போலிச்சாயம் பூசப்பட்ட நாங்கள்
பயங்கரவாதிகளாம்
அரசியல் கைதிகளாம்
அநியாயத்தைப் பார்த்தாயா?
ஆண்டவனுக்கும் கண்ணில்லையென
எண்ணத் தோன்றுகின்றது
நல்லது சித்திரையே!
சிரித்துவரும் உன் முகத்தில்
இதுவென்ன சோகக்கறை?
ஓ....
எமது உளத்துயர் உமை வாட்டியதோ?
நீயாவது எமைக் கண்டு இரங்கினாயே
நன்றி!
மலரும் இவ் வருடமாவது
எமக்கு சுபீட்சமான விடுதலை வருடமாக
சிரிப்பின் வருடமாக மலர ஆசிகூறு!



*நோயல்*

## நதிக்கரையில்... நான்

இதயம் என்ற
மாளிகையின்
கதவுகளைத் திறந்து
விழிகள் என்ற
ஜன்னல் வழியே
உன்னைப் பார்த்து...
நதிக்கரையில்
நானிருப்பேன்!
நாள் பல போனாலும்
நீ வருவாய் - இந்த
நம்பிக்கையில்...



பாலு -தீபக்செல்வன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## உனக்கு நிகர் நீ

உன்னை நான் பார்த்த நாள் முதலாய்
நான் நானாகவே இல்லை
எப்படித்தான்...
உனது ஒரே புலன்களால்
இரண்டு செயல்களைச் செய்ய முடிகின்றது?
ஆம்....!
உன்னை நான் பார்க்கும் போது
உன் விழிகள்
இரண்டு மீன்களாகின்றன!
என்னை நீ பார்க்கும் போது
உன் விழிகள்
இரண்டு தூண்டிலாகின்றன!
உனக்கு நிகர் நீ தான்.

சமரபாகு - உதயன்.

# பக்திரசம் பாலிக்கும் பன்றித் தலைச்சி அம்மன்

**"வண்டின் இசை பரப்பும் வனப்பு மிகு வளாகங்களும்**
**உண்டி சொரியும் உழவர் பெரு வயலும்**
**அண்டி அடியார்க்கு அருள்புரியும் ஆலயமாம்**
**எண்டிசையும் எங்கள் பன்றித் தலைச்சி அம்மன"**

பாக்களவு சிறிய யாழ் நகரின் மூக்களவாய் திகழும் மட்டுநகர் மீதினிலே தேக்களவு சிறிய ஆலயம். வாணிக்க முடியாத அளவுக்கு அருட்திறன் கொண்ட பன்றித் தலைச்சி அம்மன் ஆலயம் தமிழர் தம் பண்பாட்டிற்கும் பாரம்பரியத்திற்கும், பழக்கவழக்கங்களுக்கும். நிலைக்களமாய் அமைந்து பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றது.

திரிகுணாவர்த்தினியாகிய அம்மன் மகாசக்தி ஆகவும், சங்கரியாகவும், பிரபன்னதுக்க விரரிணியாகவும், தமோநாசினி ஆகவும, பிருகிருதிருபா ஆகவும், அபயப்ரதாவாகவும், திரிபுர சுந்தரியாகவும், மஹாவித்யாவாகவும், விஜயாவாகவும், தயாகரீயாகவும், தியானகம்யாவாகவும், கல்யாணியாகவுமிருந்து பவானியாக பக்தர்களுக்கு அபகர்கப்ரதாவை அளிக்கின்றாள்.

கொலைத்தீர்ப்பு பிரகடன மாகியிருந்த காலம்.

அக்கால கட்டத்திலே ஒருவன் பசுவதை செய்து அப்பசுவின் தலையை தற்போது பன்றித்தலைச்சியம்மன் ஆலயம் அமைந்துள்ள இடத்தில் ஒருவருக்கும் தெரியாதவாறு புதைத்துவிட்டான். ஆனால் அப்பசுவதை தொடர்பான செய்தி காட்டுத்தீ போல் எங்கும் பரவிற்று. எனவே மறுநாள் அரசன் அவ்விடத்தைப் பார்வையிட்டு அது உண்மையில் புசுவின் தலையாக இருந்தால் கொலை செய்தவனுக்கு மரணதண்டனை விதிக்கப்படும். எனப் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது. கொலை

கப்பட்ட ஆலயமே பன்றித் தலைச்சி அம்மன் ஆலயமாகும்.

ஈழத்தின் கண் இமையாக இலங்கும் வற்றாப்பளை அம்மன் ஆலயம், தெல்லிப்பழை துர்க்கா ஆலயம் என்பன போன்று பழம் பெரும் அம்மன் ஆலயங்களில் ஒன்றாகிய இவ்வாலயத்தின் அன்னையவள் நினைத்தவர்களுக்கு நினைத்ததை அளிக்கும் நீலாயதாட்சியாக இருந்து பக்தர்களுக்கு புகழ், கல்லி, வீரம், வெறறி, சந்தானம், துணிவு, செல்வம், தான்யம், அறிவு, அழகு, பெருமை, அறம், குலம், செளபாக்யம், ஆரோக்கியம், ஆயுள் ஆகிய பதினாறு செளபாக்கியங்களையும் பகர்ந்து கொண்டிருப்பது யாவரும் அறிந்த உண்மை.

இமயமலையிலே வாசஞ் செய்யும் அம்பிகையானவள் தனலட்சுமி, வித்தியாலட் சுமி, தானிய லட்சுமி, வீரலட்சுமி, சந்தான லட்சுமி, காருணயலட்

தில்லையம்பலத்தில் திருநடனம் புரியும் பொன்னம் பலத்தானின் ஏற்ற மிகு நாயகியை போற்றி வழிபடும் அம்மன் ஆலயங்களில் ஒன்றாகிய பன்றித்தலைச்சியம்மன் திங்கள் பெருநாளாகிய இன்று அடியார்கள் புடை சூழ அழகிய வாகன மேறி அருளாட்சி புரிகின்ற "தாயினும் நல்ல தலைவியாக" பக்திரசம் பாலிப்பதற்காக பவனி வருகின்றாள்.

"தன்னிலைமை மன்னுயிர்கள் சார தரும் சக்தி" யாகவும் "பால்நினைத்தூட்டும் தாயாகவும் பக்த கோடிகளுக்கு அருள் மழையை அள்ளிச் சொரியும் அம்பிகையாகவும் விளங்கி இன்று ஈழத்திருநாட்டில் மட்டுமன்றி கடல்கடந்த தேசங்கள் பலவற்றிலும் தன் கருனை மழையைப் பொழிந்து கொண்டிருக்கின்றாள்.

ஆவாஹரனம், ஆஸனம், பாத்தியம், ஆர்க்யம், அசமரீயம், ஸ்தானம், வஸ்திர தாரணம், சந்தன, குங்கும தாரணம், ஓளஷத் தாரணம், ஆபரண தாரணம், புஷ்பதாரணம், தூபம், தீபம், நைவேத்தியம், நீராஜனம், பிரதஷிண நமஸ்காரம் ஆகிய சோடாசோப உபசாரங்கள் மூலம் ஐஸ்வரியம் வேண்டி நிற்கும் ஆன்மாக்களுக்கு முக்திப் பிரதாயினியாக விளங்கும் பன்றித்தலைச்சி அம்மன் அருடதிறன் பற்றிய செவி வழிக் கதையொன்று அம்மன் அடியார்கள் மத்தியில் உலாவருகின்றது.

பசுவதை சட்டரீதியாக மறுக்கப்பட்டிருந்த முடியாட்சிக் காலம் பசுக்கள் கொலைக்களத்திற்கு கொண்டு செல்லப்படுவதோ, கொலை செய்யப்படுவதோ தடுக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு செய்வோருக்கு சட்டரீதியான

செய்த நபர் அன்று இரவோடு இரவாக அம்மனை நினைத்து அவளிடம் பிராயச்சித்தமாக இனிமேல் இப்படி பசுவதை செய்யமாட்டேன், நாளை எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் இப் பரிதாபகரமான துன்பத்திலிருந்து என்னைக் காப்பாற்றிவிடு என்று வேண்டினான்.

மறுநாள் வழமை போல் பொழுது புலர்ந்தது மனனன் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று நிலத்தை அகழ்ந்த போது, என்ன அதிசயம்! பசுத்தலை பன்றித்தலையாகியிருந்தது. இதனால் குறித்த நபருக்கான கொலைத்தீர்ப்பும் நீக்கப்பட்டது. அன்றிலிருந்து நிர்மானிக்

சுமி, மகாலட்சுமி, பாக்கிய லட்சுமியாக பரிணாமமெடுத்து, காஞ்சியிலே காமாட்சியாகவும் காசியிலே விசாலாட்சியாகவும் நாகபட்டினத்திலே நீலாயதாட்சி

**சுகந்தினி முருகேசு**

யாகவும் புதுக்கோட் டையிலே புவனேஸ்வரியாகவும் தாராபுரத்திலே பூரணியாகவும் தங்சாவூரிலே நாயகியாகவும் பழையலூரிலே பகவதியாகவும் மட்டுநகரிலே அம்மனாகவும் விளங்கிப் பலப்பல புதுமைகளை புரிந்து அருள் பாலிக்கின்றாள் என்று கூறினால் அதுமிகையாகாது.

**"மட்டுநகர் மீதினிலே மாண்புமிகு நாயகியாய்**
**சுட்டெரிக்கும் சூரியனில் சுகந்தரும் தேவியாய்**
**பக்தருக்கு அருள்புரியும் பதிரூப பத்தினியாய்**
**பக்திரசம் பாலிக்கும் பன்றித் தலைச்சி அம்மன்"**

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தில் விசேடகல்வி, ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, தரம் 2-1, தரம் 2-11 ஐச் சேர்நத தகுதியானோரிடமிருந்து இதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வசேட கல்வி பாடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் விசேட கல்வ தொடர்பில் விசேட பயிற் சியைப பெற்றவராக இருத்தல் வேண்டும்.

இதறகான விண்ணப்பங்களை தீவகக் கல்வி வலயத்திற்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வயலக் கல்விப் பணிப்பாளர் வே.மகேநதிரன் கேட்டுள்ளார்.(ற)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குடிநர் விநியோகத்திற்காக நிக்கொட் திட்டத்தின் கீழ் நகர சபைகது நகரும் குடிநீர்த் தாங்கி வழங்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (க-21)

## கணனி அன்பளிப்பு

(துன்னாலை)

கரவெட்டி யாக்கரு விநாயகர் வித்தியாலயத்திற்கு கரவெட்டி தெடுததனையைச் சேர்ந்த ஜயாத்துரை மார்க்கண்டு என்பவர் சுமார் 70 ஆயிரம் ரூபா பெறுதியான கணனித் தொகுதி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார். மேற்படி அன்பளிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் வ.கணபதிப்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது. (7-101)

## தமிழர் தாயகப் பகுதி அபிவிருத்தி தொடர்பில் இலங்கை அரசுக்கு நெதர்லாந்து அழுத்தம் கொடுக்க வேண்டும்

நெதர்லாந்து அரசின் வெளியுறவு அமைச்சக துணை நிர்வாக இயக்குநர் ஹர்மன் ஏ.ஸ்காப்பர் தலைமையிலான குழுவினரை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுபபாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சந்தித்துப் பேசினார்.

ஆழிப்பேரலையால் உயிரிழந்த தமிழ் உறவுகளுக்கான தனது இரங்கலை சு.ப.தமிழ்ச் செல்வன் குழுவினரிடம் ஸ்காப்பர் பகிர்ந்து கொண்டார்.

ஆழப்பேரலைக்கான பொதுக் கட்டமைப்புத் தொடர்ப்ான விபரங்களை அனுப்பி வைக்குமாறு கொழும்புத் தூதரகத்திடம் தமது அரசு கேட்டுள்ளதாகவும் ஸ்காப்பர் தெரிவித்தார்.

இரு தசாப்த கால பாரிய யுத்தம் மற்றும் ஆழிப்பேரலையால் சிதைவடைந்த தமிழர் தாயக மீள் கட்டமைப்புப் பணிகள் தொடர்பாகவும், பொதுக்கட்டமைபபுத் தொடர்பாகவும் நெதர்லாந்து அதிகாரிக்கு சு.ப.தமிழ்ச் செல்வன் விளக்கினார்.

தமிழர் தாயகப் பகுதியில் மனிதாபிமான அடிப்படையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் ஸ்ரீலங்கா அரசு புறக்கணித்து வருவது தொடர்பான தமிழ் மக்களின் கவலையையும் சு.ப.தமிழ்ச்செல்வன் இதன்போது தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா அமைச்சர்கள், எதிர்ககட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் அடங்கிய குழுவினரை ஆழிப் பேரலையால் சிதைவடைந்த தமிழர் தாயகப் பகுதிகது ஸ்ரீலங்கா அரசு அனுப்பி வைத்துத் தமிழர் தாயகத்தன் உண்மை நிலையை அறிநது அபிவிருத்திகளை மேற்கொள்ளவேண்டும்.

இதற்கு நெதர்லாந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் இச சந்திப்பில் அழைப்பு விடுத்தார்.


இந்த சந்திப்பின் போது ஏசியா, ஓசியான் பிராந்திய துறையின் மூத்த கொள்கை வகுப்பாளர் டிக்கி மெதர் ஸ்ட்டி-பி உடன் இருந்தார்.(ற-4)

## நாகர்கோவில் பாடசாலை மாணவர்க்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாதுகாப்புப் படை தளபதி மேஜர் ஜெனரல் எஸ்டி தென்னகோனின் வழிகாட்டலில் 511வது கட்டளைத் தலைமையகத தளபதிலுத்தினன் கேணல எச்.எம்.என்.வி.கேரத்தின் மேற்பார்வையில் சுனாமியால் சேதமடைந்த நாகர் கோவில் பிரதேசத்திலுள்ள றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை மற்றும் பொற்பதி மணல்காடு அ.த.க. பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களுக்கான பாடசாலைச் சீருடைகள், பாடசாலைப் பை உட்பட தேவையான பாடசாலை உபகரணப் பொருட்கள் என்பன கடந்த 4 ஆம் திகதி அனுராதபுர மத்திய மகாவித்தியாலய அதிபர் ராஜபக்ஷவுடன் ஆசிரியர் குழுவினால் வழங்கப்பட்டன.

அந்தப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு அவர்களின் படிப்பிற்கும். அவர்களைத் தைரியப்படுத்துவதற்காக சுனாமி பேரழிவின் பின்னர் அப்பாடசாலைக்கு வருகை தந்ததன் பின் பாதிப்பிற்குள்ளான பாடசாலைக்கு, குழந்தைகளுககாக அன்பளிப்புச் செய்ய அனுராதபுர மத்திய மகாவித்தியாலயத்தின் அதிபர் உட்பட ஆசிரியர் குழுவினால் இப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. (ற)



கரவெட்டிப் பிரதேச செயலகம் முன்னாள் அரச அதிபர் எஸ்.பத்மநாதனுக்கு அண்மையில் நடாத்திய சேவைநலன் பாராட்டு விழாவில் பிரதேச செயலர் எஸ்.சத்திய சீலன் தலைமை உரையாற்றுவதையும், பத்மநாதன் நன்றி தெரிவித்து உரையாற்றுவதையும் படத்தில் காணலாம். (படம்: பருநிருபர்)

## முரண்பாடுகள் குறித்து ஆராய ஜே.வி.பி. - ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு, இலங்கை மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபன மறுசீரமைபபு, அதிகாரப் பரவலாக்கல் ஆகிய விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்துக்கும் ஜே.வி.பிக்குமிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் குறித்து ஆராய ஜே.வி.பி முக்கியஸ்தர்களுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் முக்கிய சந்திப்பொன்று மிகவிரைவல் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சந்திப்பு எதிாவரும் புதன் கிழமை இடம்பெறலாம் என்று தான எதிர்பார்ப்பதாக ஜே.வி.பியின எம்.பி. ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜே.வி.பியின் நிலைப்பாட்டால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் தற்போது எழுந்துள்ள முரண்பாடு குறித்து ஜனாதிபதி பெரும் அதிருப்தி அடைந்துள்ளதாகத் தெரியுவருகின்றது.

பொதுக் கட்டமைப்பு விவகாரம் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான விடயங்களில் ஜே.வி.பி. கொண்டிருக்கும் நிலைப்பாடு குறித்து கவலை தெரிவித்திருக்கும் ஜனாதிபதி. இது குறித்துத் தனது நெருங்கிய சகாக்களிடம் விசனமும் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.


மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை சந்தித்து மக்கள் ஆணையைப் பெறுவது குறித்தும் அத் தேர்தலில் பொது ஜன முன்னணி தனிததுப் போட்டியிடுவது குறித்தும் ஜனாதிபதி தனது நெருங்கிய சகாக்களின் கருத்துக்களைக் கோரியுள்ளதாகவும் தெரியவருகின்றது. (க-9)

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 34



### அத்தியாயம் X

ஏனைய ஒவ்வொரு குழுவுக்கும் உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் தெரிவுக் குழுவின் கடமையாதலால் அவ்வாறு செய்யும்போது உறுப்பினர்களின் ஆர்வங்களும் சிறப்பறிவுத் திறனும் கவனத்திற் கொள்ளப்பட் வேண்டும். எ.கா: கணக்கீட்டிலும் கணக்காய்விலும் சிறப்பான அறிவுள்ள ஒருவர் அரசாங்கக் கணக்குக் குழுவுக்குப் பெரும் பயனுடையவராயிருப்பார். தெரிவுக்குழு ஒவ்வொரு கூட்டத்தொடரினதும் தொடக்கத்திலும் அதன் பின்னர் குழுக்களில் வெற்றிடங்கள் ஏற்படுகின்ற போது அவற்றை நிரப்புவதற்கும் கூடுகின்றது. குழுக்களின் நியமனங்களைச் செய்கின்றபோது சபை முதல்வரினதும் எதிர்க்கட்சித் தலைவரினதும் விதப்புரைகளை நாடுதலே குழுவின் வழக்கமான நடைமுறையாகும்.

நிலையியற் கட்டளைகளின் கீழ் ஏதேனும் குழுவிலிருந்து ஓர் உறுப்பினரை நீக்குவதற்கான அதிகாரம் தெரிவுக்குழுவுக்கில்லை. உறுப்பினரொருவர் ஏதேனும் குழுவில் நியமிக்கப்பட்டு விட்டால் கட்சித் தலைவர் கூட அக்குழுவிலிருந்து அவரை நீக்குவதற்கு விழைய முடியாது. ஏனெனில் உறுப்பினரொருவர் நியமிக்கப்பட்டு விட்டால் அவர் அதில் தனிப்பட்ட ரீதியாகச் செயற்படுகின்றாரேயன்றிக் கட்சியின் ஒரு நியமத்தராகவல்ல.

### *பொது மனுக்குழு*

ஒரு பிரசை அரசாங்கத்தின் நிருவாக இயந்திரத்திலுள்ள குறைபாடுகளைப் பாராளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவருவதற்கும் அவற்றால் ஏற்பட்ட குறைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் பொது மனுக்குழு இடமளிக்கின்றது. எவ்விடயங்கள் மீது மனுக்கள் சமர்ப்பிக்கலாமென்பதற்கு எல்லை கிடையாதென்பதுடன் சமர்ப்பிக்கப்படக்கூடிய மனுக்களின் எண்ணிக்கைக்கும் எல்லையெதுவுமில்லை. நிருவாகக் குறைகளுக்குப் பரிகாரம் காணும் ஒரு வழிமுறையாக அதன் பிரபல்யம் ஒவ்வொரு கூட்டத்தொடரின் போதும் சமர்ப்பிக்கப்படும் ஆயிரக்கணக்கான மனுக்களிலிருந்து புலப்படுகின்றது.

மனுவொன்றைச் சமர்ப்பிக்க விரும்புகின்ற ஒரு மனுதாரர் நிலையியற் கட்டளை 25 அ இன் கீழுள்ள நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். இந்நிலையியற் கட்டளையின் பிரகாரம் உரிய முறையில் கையொப்பமிடப்பட்ட மனுவொன்று ஒரு பாராளுமன்ற உறுப்பினரால் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஊடாகச் சபாநாயகருக்குக் கையளிக்கப்படவேண்டும். அதன் ஏற்றுக்கொள்ளத்தக்க தன்மை பற்றிய குறிப்பான வழிகாட்டல்கள் வகுக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றச் செயலாளர் நாயகம் மனுவின் ஏற்றுக்கொள்ளத்தக்க தன்மை பற்றிச் சபாநாயகருக்கு ஆலோசனை கூறுவதுடன் தேவையேற்படின் அதனைத் திருத்தியமைப்பார். சபாநாயகரால் அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பேரில், அதனைப் 19 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக சம்பந்தப்பட்ட உறுப்பினரிடம் அது திருப்பிக் கொடுக்கப்படுகின்றது. அவ்வாறு சமர்பிக்கப்பட்டதன் பின்னர் அது பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றது.

பொது மனுக் குழு விசாரணைகளை நடத்துவதில் பின்பற்ற வேண்டிய குறிப்பான நடைமுறை எதுவுமில்லை. அது சில விடயங்களை நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஓம்புட்ஸ்மன்) (1981இன் 17ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ்) ஆற்றுப்படுத்தலாம். ஒரு மனு மீது குழு விசாரணை செய்கின்ற போது அது சம்பந்தப்பட்ட அமைச்சிடமிருந்து, திணைக்களத்திடமிருந்து அல்லது வேறு பகிரங்க நிறுவனத்திடமிருந்து அறிக்கையொன்றைக் கோருகின்றது. அது அரசாங்க அலுவலர்களிடமிருந்தும் மனுதாரர்களிடமிருந்தும் வாய்மூலச் சாட்சியத்தை அல்லது ஆவணச்சான்றைப் பெற்றுக்கொள்ளவும் கூடும். மனுதாரரைக் குழுவின் முன்னர் சட்டத்தரணியொருவர் பிரதிநிதித்துவப்படுத்தலாம்.

பொது மனுக்குழு எல்லாத் தரப்பினரையும் விசாரித்த பின்னர் ஒன்றில் நிவாரணம் வழங்குகின்ற இன்றேல் மனுவை நிராகரிக்கின்ற விதப்புரைகளைச் செய்யலாம். பெருமளவுக்கு நடுவராயிருந்து இணக்குவிக்கின்ற தன்மையைக் கொண்டதான அதன் பங்கு நிருவாகத் தீர்மானங்களின் கடுமையைக் குறைப்பதில் பெரும்பாலும் வெற்றி கண்டுள்ளது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அதன் விதப்புரைகள் அவை இலக்காகக் கொண்ட அரசாங்க நிறுவனங்களால் செயற்படுத்தப்பட்டுள்ளன.

பொது மனுக்குழுவின் பங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பங்குக்கெதிராக ஆராய வேண்டியதும் அவசியம். அரசியலமைப்பின் 55(3) ஆம் உறுப்புரையின் கீழ் அமைச்சரவையானது (திணைக்களத் தலைவர்கள் தவிர) அரசாங்க அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவி விலக்கல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பவற்றுக்கான அதன் அதிகாரங்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குக் கையளிக்கலாம். எனவே அரசாங்க சேவை ஆணைக்குழு அரசாங்க அலுவலர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு தொடர்பில் அரசியலமைப்பின் கீழ் கையளிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

எனினும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நுணுகி ஆராய்வதற்கு அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றத்துக்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாகத்தான் குறைகளை விசாரணை செய்வதற்குப் பொது மனுக்குழுவுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கெதிராக நிவாரணம் வழங்கும்படி ஓர் அரசாங்க நிறுவனத்தைப் பொது மனுக்குழு கோருகின்ற போது பிரச்சினைகள் எழுகின்றன.

எனவே அரசாங்க சேவ்வ ஆணைக்குழுவின் தீர்மானங்கள் மீதான மேன்முறையீடுகளை விளக்குகின்ற ஒரு மேன்முறையீட்டுச் சபையாகப் பொதுமனுக்குழு செயற்படவில்லையென்பதே சரியான நிலை. திருத்தமாகச் சொல்வதாயின் அதன் பங்கு பெருமளவுக்கு குறை நிரப்புகின்றதொன்றாகும். இருப்பினும் பொது மனுக்குழு நிவாரணம் வ்ழங்க வேண்டியது நியாயமானதெனக் கருதுகின்றபோது அவ்வாறு செய்யும்படி அமைச்சரையும், அமைச்சரவையையும் அது வற்புறுத்தக்கூடும்.

நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் தொடக்கத்தில் பொது மனுக்குழுவால் அவருக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட குறித்த சில விடயங்களை விசாரணை செய்தார். அவ்வழக்கம் இப்போதும் தொடர்கின்றது.

1981 இன் 17 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் பதவி மூலம் அரசாங்க அலுவலரொருவரால் அல்லது பகிரங்கக்கூட்டுத்தாபனம், உள்ளூர் அதிகார சபை அல்லது ஒத்த வேறு நிறுவனம் ஒன்றின் அலுவலரொருவரால் அடிப்படை உரிமைகள் மீறப்படுதலை அல்லது வேறு அநீதி இழைக்கப்படுதலை வெளிப்படுத்துகின்ற மனுக்களைப் பொது மனுக்குழு பாராளுமன்ற ஆணையாளருக்கு ஆற்றுப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்ற ஆணையாளர் பொது மனுக்குழுவுக்குத் திரும்ப அறிக்கையிட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளார்.(பிரிவு17) அதன் பேரில் பொது மனுக்குழு அத்தகைய அறிக்கை மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பற்றிய அதன் அபிப்பிராயத்தைப் பாராளுமன்றத்துக்குத் திரும்ப அறிக்கையிட வேண்டும்.

1994இன் 26 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தினால் 1981 இன் 17 ஆம் இலக்க மூலச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு திருத்தப்பட்டதன் பேரில் மனுதாரர் பாராளுமன்ற ஆணையாளருக்கு நேரடியாக மனுச் செய்தல் சாத்தியமாயிற்று. பாராளுமன்ற ஆணையாளர் அத்தகைய புலன் விசாரணையைத் தொடங்கியமை பற்றிப் பொது மனுக் குழுவுக்கு அறிவிக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றார். அவர் தமது முடிவையும் பொது மனுக் குழுவுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும் அறிவிக்க வேண்டும்.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## புதிய நிர்வாக சபை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் அதிபர் திருமதி எஸ்.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக கல்லூரி அதிபர் திருமதி எஸ்.சண்முகநாதனும், செயலாளராக நில அளவையாளர் எஸ்.வி.கோபாலகிருஷ்ணனும், உப செயலாளராக இலங்கை வங்கி உதவி முகாமையாளர் எஸ்.கணேசஸ்'ம், பொருளாளராக ஜேதயாநிதியும் தெரிவுசெய்யப்பட்டனர். 8 அங்கத்தவர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. (7-52)

## அலங்கார உற்சவம்

(கோண்டாவில்)

கோண்டாவில் மேற்கு ஸ்ரீஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரு தினங்கள் நடைபெறவுள்ளது. (7)

## தற்காலிக வீடுகள் கையளிப்பு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இரு இடங்களில் 100 தற்காலிக வீடுகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

கட்டைக்காட்டில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்ட 70 வீடுகள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக வடமராட்சி கிழக்கு பொறுப்பாளர் யூட் கையளித்தார். அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றினால் அமைக்கப்பட்ட 30 வீடுகளை அந்நிறுவன அதிகாரி கையளித்தார்.

இந் நிகழ்வில் சுனாமி அனர்த்த செயலணி குழு செயலகத்தின் இணைப்பாளர் சுடர்மணி,யாழ். மாவட்ட கடற்புலிகளின் தளபதி சலீம்,வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச மேலாளர் காதர், தமிழர் புனர்வாழ்வு தொண்டா, கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள், போராளிகள்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (7-35)

## பாலம் சேதம் மக்கள் விசனம்

(பொன்னாலை)

காரைநகர் பழைய மீன் சந்தைக்கு முன்பாக உள்ள வீதியின் பாலம ஆறு மாதங்களுக்கு முன்னர் சேதமடைநதது. பாலம் உடைந்து போக்குவரத்து பாதிக்கப்பட்ட நிலையில் தகரம் போடப்பட்டு தற்காலிகமாக போக்குவரத்து செய்ய வழி ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அப்பாலத்தை நிரந்தரமாகப் புனரமைக்க இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (7-49)

## "அருள் ஒளி" வெளிவந்துள்ளது

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தினரால் மாதாந்தம் வெளியிடப்படும் "அருள் ஒளி" சஞ்சிகையின் பங்குனி மாத இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது. (க)

## தவறவிடப்பட்ட தங்க நகை

(யாழ்ப்பாணம்)

முகமாலைச் சோதனைச் சாவடியில் கடமைபுரியும் இராணுவ பெண் சிப்பாய் ஒருவர் கடந்த 4 ஆம் திகதி சங்கிலி ஒன்றைக் கண்டெடுத்தார். அது தற்போது முகமாலைப் பொலிஸாரிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

அதனை இதுவரை எவரும் உரிமைகோரவில்லை. எனவே இதனைத் தவறவிட்டோர் ஆதாரத்தைக் காண்பித்து பெற்றுக்கொள்ளுமாறு பாதுகாப்புப் படை கேட்டுள்ளது. (ற)

## வருடாந்த உற்சவம்

(கற்கோவளம்)

பருத்தித்துறை கோட்டுவாசல் ஸ்ரீசண்டிகா பரமேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர் வரும 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. (7-104)

## சுகாதாரப்பொருட்கள் வழங்கப்படும்

(கற்கோவளம்)

கனடா தேசிய செஞ்சிலுவைச் சங்கம் இலங்கை தேசிய செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு அடுத்தவார முற்பகுதியில் அந்தந்த நலன்புரி நிலையங்களில் வைத்து சுகாதாரப் பொருட்கள் அடங்கிய பொதிகளை வழங்கவுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைப் பிரிவின் தலைவர் சூ.தவராசா தெரிவித்திருக்கிறார். (7-104)

## பொதுமக்கள் கோரிக்கை

(அம்பன்)

ஆரம்பகாலம் தொட்டு சுண்ணாம்புக் கல்லிலான கட்டடத்தில் இயங்கி வந்த குடத்தனை உப தபால் நிலையம், இன்னும் இரு மாதங்களில் அதறகு முன்னால் அமைக்கப்பட்டு வரும் தனியார் கட்டடத்தில் இயங்கவுள்ளது.

இவ் உப தபால் நிலையத்தில் முன்னர் தொலைபேசி வசதிகள் இருந்தன. தொலைபேசிவசதி இருந்த காலத்தில் தந்தி, மணிஓடர் மற்றும் தந்திச்சேவை என்பன இடம்பெற்று வந்தன.

நாட்டில் ஏற்பட்ட வன்செயலுக்குப் பின் இச் சேவையை இப் பகுதி மக்கள் பெறமுடியாமல் பல இன்னல்களைச் சந்தித்து வந்தனர். இந் நிலையில் புதிய கட்டடத்தில் இவ் உப தபால் நிலையம் இயங்க ஆரம்பிதததும் தொலைபேசி இணைப்பு பொருத்தி தமது பிரச்சினைகளை சம்பந்தப்பட்டவர்கள் தீர்ப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-56)

## அன்பளிப்பு

(கற்கோவளம்)

கனடாவில் இருந்து விடுமுறையில் வந்த பருத்தித்துறையைச் சேர்ந்த சிவராசா குடும்பத்தினர் மருந்துப் பொதி ஒன்றை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பருத்தித்துறைப் பிரிவுத் தலைவர் சூ.தவராசாவிடம் வழங்கியுள்ளனர்.(7-104)

# கண்காணிப்புக் குழு- புலிகள் பேச்சு

(திருகோணமலை)

திருகோணமலையில் விடுதலைப்புலிகளுக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான சம்பூரிலுள்ள அரசியல்துறை அலுவலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இச் சந்திப்பின்போது புலிகளின் சார்பில் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன் தலைமையிலான குழுவினரும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சார்பில் பிரதித் தலைவர் கெல் கேஸ், கண்காணிப்புக்குழு உறுப்பினர் வேலும்மயிலும் கலந்துகொண்டனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பாக கடற்படையினரின் படகுமீது நடாத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் மற்றும் புலிகளின் காவலரண் மீதான தாக்குதல் சம்பவம் என்பன தொடர்பாக ஆராயப்பட்டது.

சந்திப்பு தொடர்பாக கருத்து வெளியிட்ட மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன், பூநகர் பகுதி காவலரண மீது நடாத்தப்பட்ட தாக்குதல மற்றும் உப்பாறு கடற்பரப்பில் இடம்பெற்ற சம்பவம் என்பன தொடர்பாக எமது நிலைப்பாட்டை கண்காணிப்புக்குழுவிடம் எடுத்துக் கூறினோம. கண்காணிப்புக் குழுவினர் தரப்பில் இருந்து இது தொடர்பான விளக்கம எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(சு-08)

## இன்று ஒரு தகவல்

# கடவுளும் மனிதனும்

நல்லவர்களுக்குப் பக்கத்தில் தான் கடவுள் எப்போதும் இருப்பார் என்று பெரியவர்கள் கூறுவது வழக்கம். நாம் அதை நமபுகிறோமோ இல்லையோ... பெரியவர்கள் அதை அடிக்கடி நம்மிடம் சொல்லிக் கொண்டு தான் இருப்பார்கள். இதற்கு என்ன காரணம்...? நாம் எப்போதும் நல்லவர்களாக இருப்ப தற்குப் பழகிக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

ஒருவர் அப்படித்தான் இன்னொருவரைப் பார்த்துச் சொன்னார். "சார்! எப்போதும் நல்லவர்களுக்குப் பக்கத்தில் தான் கடவுள் இருப்பார் என்று பெரியவர்கள் சொல்கிறார்களே... அதை நீங்கள் நம்புகிறீர்களா?" என்றுகேட்டார். இவரும் "நான் அதைப் பூரணமாக நம்புகிறேன்" என்றார். "எப்படி அதை நம்புகிறீர்கள்?"என்று கேட்டார் அவர். "நீங்கள் மிகவும் நல்லவா சார்... இப்போது உங்கள் பக்கத்தில் நான் இருக்கிறேனே" என்றார். தன் மீதே மிகுந்த அசாத்தியமான நம்பிக்கை இவருக்கு. இப்படிக் கூறிவிட்டு அதன்பின் அவரிடம் இவர் கடன கேட்கப் போகிறார் என்பது வேறு விடயம். இப்போது நாம் விஷயத்திற்கு வருவோம்.

உண்மையாகவே மிகவும் நேர்மையாகவும் நல்ல நெறியிலும வாழ்ந்து கொண்டிருந்தார் ஒருவர். நீண்டநாள் வாழ்ந்தார். அவரது காலம் ஒருநாள் முடிந்தது. நேராக சொர்க்கத்திற்குப போய்ச் சேர்ந்தார். கடவுள் இவருக்கு நல்லன்புடன் வரவேற்பளித்து உபசரித்தார். "உங்கள் அன்பும் ஆசீர்வாதமும் எப்போதும் எனக்கு வேண்டும்" என்றார் இவர்.

"எனது ஆசீர்வாதம் எப்போதும் உனக்கு உண்டு. ஏனென்றால் நீ உண்மையாகவும், நேர்மையாகவும் வாழ்ந்திருக்கிறாய். அதனால் உலகத்தில் நீ வாழ்ந்து கொண்டிருந்த போது உனக்குப் பின்னால் தான் நான் நடந்து வந்து கொண்டிருந்தேன்"என்றார் கடவுள். இந்த வார்த்தையைக் கேட்டவுடன் அந்த ஆள் மனம் உருகிப்போய் விட்டார். அப்படியே கடவுளின காலில் விழுந்தார்.

உடனே அவருக்கு கடந்த கால வாழ்க்கையை கடவுள் காட்டினார்.இவரும் கவனித்துப் பார்த்தார்."அதோ முன்னால் தெரிகிறதே அவை உனது காலடிகள். உனக்குப் பின்னால் தெரிவது எனது காலடிகள். நான் உன் பின்னாலேயே வநது கொண்டிருந்தேன்" என்றார் கடவுள். இந்த ஆளும் அதைக் கூர்ந்து கவனித்துக்கொண்டே வந்தார். தன் பின்னாலேயே தொடர்ந்து வந்து கொண்டிருந்த காலடிகள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததும் மறைந்துபோய் அதன் பின்பு இரண்டு காலடிகள் மட்டுமே வந்து கொண்டிருந்தது. அதாவது ஒரு ஆள் வருதுவது போல.

அதைப் பார்த்ததும் இவருக்கு மனதுக்கு மிகவும் கஷ்டமாகி விட்டது. ஏனென்றால் இவர் தனது வாழ்வில் மிகவும் கஷ்டப்பட்ட நேரம் அது. "நாம் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் கடவுள் நம்மை தனியாக நடக்க விட்டு விட்டாரே" என்று நினைத்து மிகவும் வருத்தப்பட்டார்.

இவரது முகத்தைப் பார்த்த கடவுள் "ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?" என்று கேட்டார். "எனது வாழ்நாள் முழுவதும் நீங்கள் என் பின்னாலேயே வந்து என்னைக் காப்பாற்றியிருக்கிறீர்கள். ஆனால் நான் வாழ்வில் மிகவும் கஷ்டப்பட்ட சமயத்தில் என்னைத் தனியாக விட்டு விட்டீர்களே! அதை நினைத்தால் தான் வருத்தமாக இருக்கிறது என்றார்.

கடவுள் இதற்கு சிரித்துக் கொண்டே பதில் சொல்கிறார். "ஓ... அதைச் சொல்கிறாயா... அங்கே தெரிவது உனது காலடிகள்" என்றார். இவருக்கு ஒன்றும் புரியவில்லை. "எப்படி அது?" என்று கேட்டார்."நீ கஷ்டப்பட்ட சமயத்தில் உன்னை தோளில் தூக்கிக்கொண்டு நடந்தேன். அப்படி நடந்த என்னுடைய காலடிகள் அல்லவா அது?" என்றார். அதைப்புரிந்து கொண்டவுடன் மறுபடியும் காலில் விழுந்து கும்பிட்டார் இவர்.

நல்லவர்களுக்குத் துணையாக கடவுள் எப்போதும் இருப்பார் என்பதை விளக்குவதற்காக இந்தக்கதை. இது ஒரு பெரியவர் சொன்னது. இப்போது நான் ஒரு கதை சொல்கிறேன்.

ஒரு மோசமான ஆள் வாழ்ந்து முடிந்ததும் நேராக நரகத்திற்குப் போய்ச் சேர்ந்தான். இவனுக்கும் கடவுள் கடந்த காலத்தைப் பார் என்று காட்டினார். இவனும் மிகவும் ஆர்வமாகப் பார்த்தான். பார்த்தால் இவனது காலடிக்குப் பின்னாலும் தொடர்ந்து இன்னொரு காலடி வந்து கொண்டே இருந்தது. கடைசி வரைக்கும் தொடர்ந்து இருந்தது. "என் பின்னாலும் நீங்கள் வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே" என்றான் கடவுளிடம்.

அதற்குக் கடவுள் சொன்னார். "அப்படி இல்லை... அது இரண்டுமே உனது காலடிகள் தான். எப்போது பார்த்தாலும் நீ குடிபோதையில் இரண்டு ஆசாமியாகவே இருந்திருக்கிறாய். அப்படியே வாழ்க்கையை முடித்துக் கொண்டு நேராக இங்கு வந்து சேர்ந்திருக்கிறாய்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஜே.வி.பி-ஜனாதிபதி முரண்பாடுகளால் அரச நிர்வாகம் ஸ்தம்பிக்கும் நிலையில்!

## எச்சரிக்கிறார் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

சுதந்திர முன்னணி அரசு ஒரு ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிலையில் மக்கள் தினமும் நித்திரை விட்டு எழும்போது பஸ்கள் இன்று ஓடுமா? புகைவண்டி



ஓடுமா? எரிபொருள்,மின்சாரத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள் நடைபெறுமா என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

இவ்வாறான மக்கள் மாற்றமொன்றை விரும்பும் நிலை தற்போது தோன்றியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யும் ஜனாதிபதியும் தமக்கிடையிலான முரண்பாடுகளைப் பொது மேடைகளில் வைத்து விமர்சிக்காமல் தமக்குள் பேச்சுக்களை நடாத்தித் தீர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இவர்களுக்குள்ளான முரண்பாடுகள் அரச அதிகாரிகள் மத்தியில் தடுமாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன. இதனால் அரச நிர்வாகம் ஸ்தம்பித நிலைக்குள் செல்லலாம்.

கிழக்கு மாகாணம் வன்முறைக் களமாக மாறி வருகிறது. கடந்த ஐ.தே.க. அரசிடமிருந்து பாதுகாப்பு அமைச்சைப் பறித்தெடுத்த போது தேசிய பாதுகாப்பு அரசிடமிருந்து பாதுகாப்பு அமைச்சைப் பறித்தெடுத்த போது தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டதாக ஜனாதிபதி கூறினார்.

ஆனால் இன்றைய நிலை என்ன? இன்று போர் நிறுத்த ஒப்பந்தம் கூட ஆபத்தான நிலைக்குள் இருக்கிறது. இவ்வாறு கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மகாநாடொன்றில் ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

புதுவருடம் பிறக்கின்ற இந்நேரத்தில் வாழ்க்கைச் செலவு மிகவும் உயர்ந்துவிட்டது. பணவீக்கம் 18 சதவீதமாகி விட்டது. தமது உற்பத்திகளை விற்க முடியாமல் விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

கூட்டணிக் கட்சிகளுள் முரண்பாடுகள் முற்றிவருவதால நாடு ஒரு அராஜக நிலைக்குள் சென்று கொண்டிருக்கிறது. அத்தியாவசிய சேவைகள் முடங்கிவிடும் ஆபத்துக்கள் உள்ளன என்றும் ஜீ. எல். பீரிஸ் மேலும் தெரிவித்தார். (ந-6)

# துணைப்படை வீரர் திருமலை செல்ல இராணுவத்தினர் தடை விதித்தனர்

(திருகோணமலை)

திருகோணமலை பூநகரில் விடுதலைப்புலிகளின் சோதனை நிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்த தேசிய துணைப்படை வீரர் ஒருவாின் உடல் நிலை மோசமானதையடுத்து அவரை திருகோணமலை நகர மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும நடவடிக்கை இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பூநகர் சோதனை நிலையம் மீது இராணுவப் புலனாய்வு அணி மற்றும் கருணா குழு இணைந்து மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதோடு, தமிழீழ தேசியத் துணைப்படை வீரா ஒருவர் படுகாயமடைந்திருந்தார்.

திருகோணமலை சம்பூரில் நேற்று முன்தினம் இரவு அவரின் உடல் நிலை மோசமானதையடுத்து அவரை திருகோணமலை நகர மருத்துவமனைக்கு தரைவழியாகக் கொண்டு செல்வதற்கு இராணுவத்தினரிடம் அனுமதி பெற்றுத்தருமாறு விடுதலைப்புலிகள் போர் நிறுதத‌க் கண்காணிப்புக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

போா நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் அவ் வேணடுகோளை இராணுவத்தினரிடம் அறிவித்தபோது, இராணுவத்தினர் தமது வழித்துணையுடனேயே அவரை கொண்டு செல்ல முடியும் என்றும் இரவு நேரத்தில் அது முடியாது என்றும் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தினர் இழுபறி நிலையை ஏற்படுத்தி அவரை திருகோணமலைக்குக் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்க மறுத்தனர். இதன்பின்னர் கடும் இழுபறியின் பின் வழித்துணையின்றி கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டு அவர் கட்டைபறிச்சான் சோதனை நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு இராணுவத்தினர் அவர் பயணம் செய்வதற்கு அனுமதி வழங்க பின்னடித்துக்கொண்டிருந்தனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் இராணுவத்தினரின் இச்செயற்பாட்டை அறிவித்ததையடுத்து அவர்கள் மீளவும் இது தொடர்பாக இராணுவ அதிகாரிகளுடன தொடர்பு கொண்டனர். மீளவும் அவர்கள் கணகாணிப்புக்குழு வழித்துணை இல்லாமல் செல்ல முடியாது என்று அறிவித்தனர்.

இதனபின்னர் கொழும்பில் உள்ள கண்காணிப்புக்குழு தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டு அவரை தொடர்ந்து செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதன் பின் கட்டைபறிச்சான் இராணுவத்தினர் காயமடைந்தவர் செல்லலாம் ஆனால் அவருக்கு துணையாகப் போராளிகள் எவரும் செல்லமுடியாது என நிபந்தனை விதித்தனர்.

காயமடைந்தவர் உடல்நிலை மோசமாகிய நிலையில் அவருக்கு துணையாகச் செல்லக்கூடாது என்ற நிபந்தனை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாத நிலையில் அதற்கான அனுமதி கோரப்பட்டது.

இரவு 10 மணிவரை படையினரால் அனுமதி வழங்கபபடாத நிலையில் மழை பெய்து கொண்டிருந்த சூழலில்,உடல்நிலை கடுமையான நிலையிலிருந்த தேசியத துணைப்படை வீரர் மீளவும் சம்பூருக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

தாக்குதலில் காயப்பட்டு உடல் நிலை மோசமான ஒருவரை சிகிச்சைக்காக பயணம் செய்ய படையினர் தடை விதிததமையானது ஒரு மோசமான செயற்பாடு என்று திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் தெரிவித்துள்ளார். (க)

# சட்டவிரோதமான முறையில் துப்பாக்கி வைத்திருந்தவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூரிலுள்ள மிச் நகரில் 29 வயது முஸ்லிம் குடும்பஸ்தரொருவர் ரி-56 ரக துப்பாக்கியை சட்டவிரோதமான முறையில் மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

அப்துல் ஹமீட் ரகுமத்துல்லா அல்லது ரகுமான் எனப் படும் குறிப்பிட்ட நபரது வீட்டில் ஆயுதம் மறைத்து வைத்திருககப்பட்டிருப்பதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் அதிகாலை இவரது வீட்டில் தேடுதல் நடத்திய பொலிஸாரினால் ரி-56 ரக துப்பாக்கியொன்று, இரண்டு மகசீன்களுடன் அதற்கான 60 ரவைகளுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசாரணையில் இவ் ஆயுதம் விறகு வியாபாரியொருவாிடம் ரூபா 5 ஆயிரத்திற்கு தான் கொள்வனவு செய்ததாக இவர் தொிவித்துள்ளார். நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி எம்.எச். எம்.அஜ்மீர் முன்னிலையில் இவர் ஆஜர் படுத்தப்பட்ட போது எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இதறகிடையில் மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி கொம்மாந்துறையிலுள்ள வீடியோக் கடையொன்றின் மீது நேற்று அதிகாலை இனந்தொியாத நபாகளினால் கைக்குண்டு வீசபபட்டுள்ளது. சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இது ஒருபுறமிருக்க அம்பாறை மாவட்டம் தேசியத்தைக் கண்டியிலுள்ள பிகிட்டிவெல என்னும் கிராமத்தில் நேற்று முன்தினம் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உட் பட மூவர் காயமடைந்துள்ளனர். ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் டிக்சன் ரத்னாயக்கா வயது 35 என்பவர் விடுமுறையில் அக்கிராமத்திற்கு சென்ற சமயம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.குறிப்பிட்ட சம்பவத்தில் காயமடைந்த மேலும் இரண்டு கிராமவாசிகளும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க)

# சீனப் பிரதமர் இந்தியா பயணம்

(கொழும்பு)

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்த சீனப் பிரதமர் வென்ஜியாபோ தனது விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் இந்தியா புறப்பட்டுச் சென்றுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் பிறபகல் 4.30 மணியளவில் அவர் இங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

அவரது இலங்கை விஜயம் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியை சந்தித்துக் கலந்துரையாடிய இவர், இலங்கை அரசாங்கத்துடன் ஐந்து முக்கிய ஒப்பந்தங்களையும் செய்து கொணடார். (ந-8)

# 2004 சா/த பரீட்சையில் 8 பாடத்திலும் சித்தியடையாதோர் 25 ஆயிரம் பேர்

(கொழும்பு)

கடந்த 2004 டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 25ஆயிரம் பேர் 8 பாடங்களிலும் சித்தியெய்தியிருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இது மொத்தத் தொகையில் 8 வீதமாகும்.

இதுபற்றி பரீட்சைகள் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், முன்னைய ஆண்டுகளை விடவும் கடந்த ஆண்டின் பெறுபேறுகள் முன்னேற்றமாக உள்ளன. 2003ஆம் ஆண்டு 8 பாடங்களிலும் சித்தி எய்தாதோர் எண்ணிக்கை 10 வீதமாக இருந்தது. 2004 அது 8 வீதமாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. மேலும் கொழும்பு மாவட்டத்தில் 994 மாணவர்கள் பிரதான பாடங்களில சித்தி எய்தியிருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (த)

# அல்லி ராணியும்

தமிழக முதல்வர் ஜெயலலிதா முன்னர் நடிகையாக இருந்தவர். ஜனாதிபதி சந்திரிகா ஒரு நடிகரை மணந்தவர். தான்தான் உலகிலேயே சிறந்த நடிகை என்று ஜனாதிபதி சந்திரிகா கடந்த வருடம் பொதுக்கூட்டமொன்றில் பேசியிருந்தார்.

பல விடயங்களில் ஒத்துப்போகும் இருவரினதும் அரசியல் சிந்தனைகளும் பதவியைப் பிடிப்பதற்காகப் போடும் திரைமறைவுத்திட்டங்களும்



கூட ஒன்றாகவே காணப்படுகின்றன.

ஜனாதிபதி பதவியை இலக்குவைத்து அடுத்த தடவையும் அந்தக்கதிரையை பிடிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா

அண்மைக்காலங்களில் அவிழ்த்துவிட்ட இரகசிய சத்தியப்பிரமாண கதைகளெல்லாம் எதிர்க்கட்சிகளாலும் சட்ட வல்லுனர்களாலும் சுட்டுவீழ்த்தப்பட்டு விட்டன.

இந்நிலையில் தனது பதவியை எப்படித்தக்க வைப்பது என்று சட்ட ஆலோசகர்களுடன் மந்திராலோசனை நடத்திய ஜனாதிபதி சந்திரிகா எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள என்ன வியு,கத்துடன் காத்திருக்கிறார் என்பதை சிறையில் அடைக்கப்பட்டுள்ள சந்திரிகாவின் முன்னாள் விசுவாசியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய முக்கிய கரங்களில் ஒருவருமான எஸ்.பி.திஸநாயக்க போட்டு உடைத்திருக்கிறார்.

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் படி ஒருவர் இரண்டு தடவைகளுக்குமேல் ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியாது.

அரசியலமைப்பின் 31(2) சரத்தின்படி ஜனாதிபதி பதவிக்கு இரண்டு தடவைகள் தெரிவு செய்யப்பட்டவர் மூன்றாவது தடவை

அப்பதவிக்கு மக்களால் தெரிவு செய்யப்படுவதற்கான தகுதியை இழக்கிறார்.

இதனைத் தெளிவாகக் கூறியுள்ள அரசியலமைப்பு, ஏற்கனவே இரண்டு தடவை பதவிவகித்த ஜனாதிபதிஒருவர், பதவியில் உள்ள ஜனாதிபதி ஒருவர் இராஜினாமா செய்யும்போது ஏற்படும் வெற்றிடத்துக்கு மீண்டும் ஜனாதிபதியாக வரக்கூடாது என்று எந்த இடத்திலும் கூறவில்லை.

இந்த ஓட்டையை பாவித்து மீண்டும் ஜனாதிபதியாகுவதே சந்திரிகாவின் நோக்கம் என்ற விடயத்தை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளார் எஸ்.பி.திஸநாயக்க.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில்

# அலரி ராணியும்

டம்மி வேட்பாளராக பிரதிப்பாதுகாப்பு அமைச்சரான ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை



நிறுத்த உள்ள சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நீக்கிவிட்டு தான் பிரதமராகுவார்.

தேர்தலில் வென்ற ரட்ணசிறி விக்கிரமநாயக்க பின்னர் ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்ய, அப்பதவிக்கு அப்போதைய பிரதமர் சந்திரிகா குமாரதுங்க நியமிக்கப்படுவார்.

ரட்ணசிறி தெரிவு செய்யப்பட்ட காலம் முழுவதும் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக பதவிவகிக்கப்போகிறார்.

அவர் ஜனாதிபதியாக வந்த உடனேயே அமைச்சரவை மறு சீரமைக்கப்பட்டு தனக்கு ஜனாதிபதிப் பதவியை பெற்றுத்தந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு பிரதமர் பதவியை வழங்கிவிட்டு மஹிந்த ராஜபக்ஷவை அப்பதவியிலிருந்து நீக்குவார்.

ஆக மொத்தத்தில் இங்கு நடக்கப்போகும் காரியங்கள்:

வாடகைத்தாய் போல ஜனாதிபதிப் பதவியை பெற்று அதை சந்திரிகாவிடம் தாரைவார்க்கப்போகிறார் ரட்ணசிறி.



தனக்கு ஜனாதிபதிப் பதவியை பெற்றுத்தந்ததற்கு பிரதியுபகாரமாக 'பொன் வைத்த இடத்தில் பூ வைப்பது போல' ரட்ணசிறிக்கு பிரதமர் பதவியை வழங்கப்போகிறார் சந்திரிகா குமாரதுங்க.

அதிகார இழுபறியில் தற்போது அடிக்கடி சந்திரிகாவுடன் மோதும் மஹிந்த ராஜபக்ஷ பலிக்கடாவாகி பிரதமர் பதவியை இழக்கப்போகிறார்.

மஹிந்த ராஜபக்ஷவை வெட்டி விடுவதன் மூலம் அவர் முன்னர் பிரதமர் பதவிக்கு தெரிவான போது அவருக்கு போட்டியாக இருந்தவரும் - ஜனாதிபதியின் ஆஸ்தான வித்தகருமான - கதிர்காமரின் வயிற்றில் பால் வார்க்கப்போகிறார் ஜனாதிபதி.

ஜனாதிபதி கதிரையை மீண்டும் பிடிப்பதற்கு இவ்வளவு பெரிய திட்டத்துடன் காத்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தற்போது அவரின் கவனமெல்லாம் தனது கட்டுப்பாட்டிலுள்ள பொலிஸ், இராணுவம் இரண்டையும் பயன்படுத்தி ஜனாதிபதித் தேர்தலில் ரட்ணசிறியை எப்படியாவது வெல்லவைப்பதுதான்.

இதே தந்திரோபாயத்தையே 2001 இல் அப்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதா வேறு சூழ்நிலையில்



பயன்படுத்தியிருந்தார்.

அதாவது டான்சி நிலபேர ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஜெயலலிதா முதல்வராக பதவி வகிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டவுடன், பதவியை இராஜினாமா செய்த ஜெயலலிதா அதற்கு டம்மி முதல்வராக அப்போதைய வருமானத்துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தை நியமித்தார்.

பின்னர், வழக்கில் தான் நிரபராதி என்று தீர்ப்பு வாங்கிய பின் ஆண்டிப்பட்டி தேர்தல் தொகுதியில் வென்று மீண்டும் முதல்வரானார்.

இந்தஅக்கினிப்



பரீட்சையிலிருந்து தனக்குத் தேவையான சட்ட நூலை இழுத்து தனது பதவிக்கதிரைக்கு குஞ்சரம் கட்டியிருக்கிறார் சந்திரிகா என்றே கூறவேண்டும்.

தமிழ்நாட்டில் அன்று அல்லிராணி எனப்பட்ட ஜெயலலிதா புரிந்த லீலையை இன்று அலரி மாளிகைக்குள் புகுவதன்மூலம் தானும் புரிந்து பதவியைப்பிடிக்க திட்டமிடுகிறார் சந்திரிகா அம்மையார். பதவியைப் பிடிப்பதற்கு குறுக்கு ஒழுங்கைகள், பொட்டுகள் எல்லாவற்றையும் தேடிப்பிடித்துள்ள ஜனாதிபதி சந்திரிகா தனது இந்த வேகத்தையும் விவேகத்தையும் தமிழர் பிரச்சினைக்கான தீர்வில் காட்டியிருந்தால் அது எப்போதோ சுமுகமாக முடிந்திருக்கும். □

**இணையப் பார்வை**

## பட்டம் வழங்கல்

(துன்னாலை)

கரவெட்டி கிழக்கு யாக்கரு விநாயகர் ஆலய மகோற்சவ வைபவங்களுக்கு கடந்த பல ஆண்டுகளாக பிரதம குருவாக கிரியைகளை திறம்பட நடாத்தி ஆலயகுரு சபாநாதக்குருக்களுக்கு (துன்னாலை சாரதாபீடம)மேற்படி ஆலய தேவஸ்தான சபையினரால் "சிவாச்சாரிய திலகம்" எனும் கௌரவப்பட்டமும் பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு இந்துமத குருமார் ஒன்றியத்தின் சிபார்சுடனும் அவரது தீட்ஷாகுரு யோகிஸ்வரக் குருக்களின் ஆசியுடனும வருடாந்தத் திரு விழாவின் தீர்த்தோற்சவ நாளன்று ஆலயத்தில் இடம்பெற்றது.

(7-101)

## நேரம் நீடிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் கீழ் இயங்கும் பொது நூலகத்தின் கிளை நூலகங்களான மீசாலை, நுணாவில் பகுதி நூலகங்களில் இரவல் பகுதி வாசகர்களின் நலன் கருதி ஏப்ரல் மாதத்திலிருந்து நேர நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய காலை 9.00மணி முதல் மாலை 6.00மணிவரை நூலக இரவல்பகுதி செயற்படுமென நகரசபைச் செயலாளர் ஆகுணமணிதேவி அறிவித்துள்ளார்.

(7-21)

## பயிற்சிப் பட்டறையும் பரீட்சையும்

(கொழும்புத்துறை)

திருமறைக் கலாமன்ற நாடகப் பயிலக மாணவர்களுக்கான நிறைவுப் பயிற்சிப்பட்டறை இன்றும் நாளையும், காலை 9.00மணி தொடக்கம் மாலை 5.30மணிவரை மன்ற மணடபத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன், அத் தினங்களில் நாடக அரங்கியல் சார் பரீட்சையும் இடம்பெறவுள்ளது. கடந்த வருடம் பயிலகத்தில் இணைந்த சகல மாணவர்களையும் இவற்றில் பங்குபற்றுமாறு திருமறைக் கலாமன்றம் கேட்டுள்ளது.

(த-7-51)

## துறைமுகத்தில் பஸ் தரிப்பிடம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையிலிருந்து யாழ. செல்லும் சகல பஸ்களும் ஊர்காவற்றுறை பொதுச்சந்தை முன்பாக இதுவரை நிறுத்தப்பட்டு வந்தன.

இது போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதால் சகல பஸ்களையும் துறைமுகத்தில் நிறுத்துமாறு ஊர்காவற்றுறை போக்குவரத்துப் பொலிஸார் ஒலிபெருக்கி மூலம்அறிவித்துள்ளனர்.

(7)

## புனித-யூதாததேயு திருவிழா

(ஊர்காவற்றுறை)

கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித-யூதாததேயு அப்போஸ்தலரின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணிக்கு யாழ். அரியாலை ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

திருநாள் திருப்பலியுடன் சொரூபப் பவனியும் இடம்பெறும். திருவிழாவுக்கு முதல் நாள்23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5மணிக்கு நற்கருணை பவனியும் ஆராதனையும் இடம்பெறும்.

(7)




நேற்றுக் காலை புத்தூரில் வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றும் ஹண்டர் ஒன்றும் எதிரெதிரே மோதியதில் இவ்விரு வாகனங்களினதும் முற்பக்கம் சேதத்திற்குள்ளாயின. விபத்துக் குள்ளான இரு வாகனங்களையும் படங்களில் காண்க.

இதேவேளை, தெய்வாதீனமாக இவ் விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(படங்கள்: ஞா. ஐங்கரன்)

## சகல மாவட்ட, பிரதேச செயலாளர்களும் பதில் அதிகாரிகளை நியமிக்க வேண்டும்

(கொழும்பு)

புதுவருட விடுமுறை காலத்தில் தமது அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்திலிருந்து வெளியே செல்வதாயின் தமது கடமைகளை மேற்கொள்ளுவதற்கு பொறுப்புவாய்ந்த பதில் அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தவிடயம் குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் டி.திஸ்ஸநாயக்க தெரிவித்தார்.

இவ்வாறு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுடன் அவசர நிலைமைகளின் போது தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் அவர்களது தொலைபேசி இலக்கங்களை அரச நிர்வாக அமைச்சுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டுமென அமைச்சு, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

அவசர நிலைமைகளின்போது குறிப்பிட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்ளுவதற்காகவே இவ்வாறான பதில் அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென உத்தரவிட்டதாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

(க-9)

# மிகவும் எளிமையாக நடந்த சார்லஸ் – கமீலா திருமணம்

(இலண்டன்)

இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் - கமீலா திருமணம் நேற்று முன்தினம் எளிமையாக நடந்தது. சார்லஸின் மகன் வில்லியம்ஸ் சாட்சிக் கையெழுத்திட்டார்.



இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் - கமீலா பார்க்கர் திருமணம் போப் இறுதிச்சடங்கு காரணமாக ஒருநாள் தள்ளிப் போடப்பட்டமை தெரிந்ததே. நேற்றுமுன் தினம் சார்லஸ் - கமலா திருமணம் திட்டமிட்டப்படி நடந்தது. இங்கிலாந்து தலைநகரம் இலண்டனில் இருந்து 25மைல் தூரத்தில் உள்ள விண்ட்சர் நகரத்தில் இந்தத் திருமணம் நடநதது. அங்குள்ள விண்ட்சர் கோட்டையில் தங்கியிருந்த சார்லஸும், கமீலாவும் நேற்றுமுன்தினம் திருமண உடையில் கோட்டையிலிருந்து காரில் பயணம் செய்து நகரத்தின் நடுவில் உள்ள டவுண் ஹாலைச் சென்றடைந்தனர். சார்லஸ் டார்க் நிற மானிங் கோட்டு சூட்டு அணிநதிருந்தார். கமீலா சப்பி நிற பட்டில் தைத்த கோட், கவுன், தொப்பி அணிந்திருந் டவுண் ஹாலில் உள்ள ஆஸ்காட் என்ற உள் அறையில் 20நிமிட நேரத்தில் திருமண நிகழ்ச்சி நடந்தது. 56 வயதான சார்லஸும், 57 வயதான கமீலா பார்க்கரும் திருமண மோதிரங்களைமாற்றிக் கொண்டனர். திருமணம் நடந்த அறையில் 28பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் சார்லஸின் 2 மகன்களான வில்லியம், ஹரி மற்றும் கமீலாவின் பிள்ளைகளான டாம், லாரா ஆகியோரும் அடங்குவார்கள்.

இளவரசர் வில்லியம் தந்தை சார்லஸின் திருமணத்துக்குச் சாட்சிக் கையெழுத்துப் போட்டார். சார்லஸின் தாயாரான எலிசபெத் ராணி இந்தத் திருமணத்துக்குச் செல்லவில்லை. இவர் மூத்த மகனின் திருமணத்தைப் புறக்கணித்துவிட்டார். திருமணம் முடிந்ததும் தம்பதிகள் இருவரும் ரோல்ஸ் ராய்ஸ் பாண்டம் 4 லைமோசின் ஆடம்பர காரில் மீணடும் விண்ட்சர் கோட்டைக்கு திரும்பினார்கள். அப்போது வழி நெடுகிலும் சுமார் 15 ஆயிரம் மக்கள் திரண்டு நின்று அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

சார்லஸின் முன்னாள் மனைவி டயானாவின் ஆதரவாளர்கள் திடீரென ஆர்ப்பாட்டம் செய்யலாம் எனக் கருதப்பட்டதால் கடும் பொலிஸ பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வீட்டுக்கூரைகள் மீது குறிதவறாமல் சுடக்கூடிய அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

விண்ட்சர் கோட்டையில் உள்ள புனித ஜார்ஜ் தேவாலயத்தில் மணமக்களுக்கு ஆசி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. உலகம் முழுவதும் உள்ள 7.70கோடி ஆங்கிலேய கிறிஸ்தவர்களின் தலைவரான காண்டர்பரி பேராயா ரோவன் வில்லியம்ஸ் மணமக்களை ஆசீர்வதித்தார். ராணி எலிசபெத் இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயர் உட்பட 800 முக்கிய பிரமுகர்கள் அந்த நிகழவில் பங்கேற்றனர். அதில் மன்னர்கள், அரசியல் புள்ளிகள், பாப் பாடகர்கள் கால்பந்தாட்ட வீரர்கள் சினிமா நடிகர்கள் போன்றவர்களும் அடங்குவார்கள்.

திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்குப் பின் சார்லஸ் -கமீலா தம்பதியினர் ஸ்கொட்லாந்து நாட்டுக்குத் தேனிலவுக்குப் புறப பட்டுச் சென்றனர்.

1981ஆம் ஆண்டு சார்லஸ் - டயானா திருமணம் நடந்தபோது ஒட்டுமொத்த இங்கிலாந்து மக்களும் அதைத் தங்கள் வீட்டு நிகழ்ச்சி போலக் கருதி கொண்டாடினார்கள். இலண்டனில் உள்ள புனித பால் தேவலாயத்தில் அவர்களது திருமணம் நடந்தது.

ஆனால், சார்லஸ் - கமீலா திருமணம் எந்தவித ஆடம்பரமும் இல்லாமல் மிகவும் எளிமையாக நடந்து முடிந்தது. இங்கிலாந்து மக்களில் மிகக் குறைவான பகுதியினரே இந்தத் திருமணத்தில் ஆர்வம் காட்டினார்கள். (ற)

# கை குலுக்கிய விவகாரம் ஈரான் அதிபர் மறுப்பு

(டெகரான்)

இஸ்ரேல் அதிபருடன் கை குலுக்கியதாக வந்த செய்திகளை ஈரான் அதிபர் முகமது கடாமி மறுத்துள்ளார்.

மறைந்த போப் இரண்டாம் ஜான்பாலின் இறுதிச்சடங்கு மற்றும் உடல் நல்லடக்கம் வத்திக்கானில் நடந்தது. இறுதிச் சடங்கு நிகழ்வில் நூற்றுக்கணக்கான உலகத தலைவர்கள் கலந்துகொண்டனர். ஈரான், இஸ்ரேல் நாடுகளின் தலைவர்களும் பங்கேற்றனர்.

ஈரானில் பிறந்த இஸ்ரேலிய அதிபர் மோஷி கட்சேவ், இறுதிச்சடங்கு நிகழ்வின்போது சிரியா, ஈரான் நாட்டுத் தலைவர்களுடன் கைகுலுக்கியதாகக் கூறினார்.

இதை ஈரான் அதிபர் கடாமி மறுத்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில் ‘இஸ்ரேல் அதிபரைச் சந்தித்துக் கைகுலுக்கவோ, பேசவோ இல்லை’ என்றார். (ற)



## ஈராக்கில் குண்டுவெடிப்பு
# 15 ஈராக்கிய இராணுவத்தினர் ஸ்தலத்தில் உடல்சிதறிப் பலி

(பக்தாத்)

பக்தாத் அருகே நேற்றுமுன் தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 15 ஈராக் இராணுவ வீரர்கள் பலியானர்ர்கள்.

ஈராக் தலைநகர் பக்தாத் அருகே லேடிபியா என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் ஈராக் இராணுவ வீரர்களின் வாகனங்கள் சென்றுகொண்டிருந்தன. அப்போது அந்த சாலையில் சக்தி வாய்ந்த குண்டுவெடித்தது.

இதில், ஈராக் இராணுவ வீரர்கள் 15பேர் ஸ்தலததிலேயே சிதறிப் பலியாயினர். மேலும் ஏராளமானோர் படுகாயம் அடைந்தனர். இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (ற)

## WORLD NEWS உலக தரிசனம்

# ‘ஆலடி அருணாவைக் கொல்ல ரூ.1இலட்சம் முன்பணம் வாங்கினேன்’
## கைதான வேல்துரை வாக்குமூலம்

(காரைக்குடி)

ஆலடி அருணாவை கொலை செய்ய ரூபா 5இலட்சம் பேசி ரூபா 1இலட்சம் முன்பணம் வாங்கியதாக இக்கொலை வழக்கில் கைதான வேல்துரை காரைக்குடி பொலிஸர் நடத்திய விசாரணையில் தெரிவித்துள்ளான்.

முன்னாள் அமைச்சர் ஆலடி அருணா கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியாக வேல்துரை கைது செய்யப்பட்டமை தெரிந்ததே. கைதான வேல்துரை ஏற்கனவே காரைக்குடியில் கடந்த சில மாதங்களுக்குமுன் தங்கியிருந்தான். அங்கு அவன் தங்கியிருந்த விடுதியில் வெடிகுண்டு, துப்பாக்கி கைப்பற்றப்பட்டன. அங்கு உருண்டை ராஜன், கல்லல் லட்சுமணன் என்ற 2பேர் மட்டும் பிடிபட்டனர். மீதமுள்ளவர்கள் தப்பியோடிவிட்டனர். இச்சம்பவம் முன்னாள் அமைச்சர் ஆலடி அருணா கொலை செய்யப்படுவதற்கு முன் நடைபெற்றது.

இதனையடுத்து பிடிபட்ட 2 பேரிடம் பொலிஸார் விசாரித்தனர். காரைக்குடி தேவகோட்டை பகுதியில் அவர்கள் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட சதித்திட்டம் தீட்டியிருக்கலாமென செய்திகள் வெளியானது. மேலும் தப்பியோடியவர்களில் வேல்துரை என்ற இந்த பிரபல ரவுடியும் இருந்தான். இவர்கள் தப்பியோடிய நிலையில்தான் முன்னாள் அமைச்சர் ஆலடி அருணா கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில தான் வேல்துரை கைது செயயப்பட்டான்.

ஏற்கனவே காரைக்குடியில் பிடிபட்டவர்கள் கூலிப்படை கும்பல் எனத் தெரியவந்தது. இந்த நிலையில், ஆலடி அருணா கொலை வழக்கில் கைதான வேல்துரையைக் காரைக்குடி பொலிஸார் நீதபதி பால ராஜ மாணிக்கம் முன்னிலையில் ஆஜா படுத்தி அதன்பின் 5நாள் விசாரணைக்கு கோரினர். அப்போது வேல்துரை நீதிபதியிடம் எனக்கு சர்க்கரை நோய் உள்ளது. பொலிஸில் ஒப்படைத்தால் அடித்து துன்புறுத்துவார்கள் எனக் கூறினான்.

பின்னர் நீதிபதி பாலராஜ மாணிக்கம் பொலிஸார் ஆஜர் படுத்திய வேல்துரையிடம் 3நாள் பொலிஸ் விசாரணை நடத்த அனுமதி வழங்கி துன்புறுத்தக் கூடாது எனறும் உத்தரவிட்டார்.

இதனையடுத்து, வேல்துரையை பொலிஸ் காவலில் எடுதது பொலிஸ் விசாரணை நடத்தினர். விசாரணையில், ஆலடி அருணா கொலைக்கு 5இலட்சம் பேசி 1இலட்சம் அட்வான்ஸ் வாங்கி அதை காரைக்குடியில் தங்கியிருந்தவர்களிடம் கொடுத்துவிட்டு திருச்சி திரும்பி விட்டேன். காரைக்குடியல் இருந்தவர்களில் 2பேர் மாட்டிக்கொணடனர். மீதம் உள்ளவர்களை வைத்து ஆலடி அருணாவைக் கொலை செய்தோம். தேவகோட்டை காரைக் குடியில் எந்தத் திட்டமும் தீட்ட வில்லை. இவ்வாறு பொலிஸ் விசாரணையில் வேல்துரை கூறியதால் வேல்துரையை மீண்டும் நீதிபதி பாலராஜ மாணிக்கம் முன்னிலையில் ஆஜர்படுத்தி அதன்பின் பாளையங் கோட்டை சிறையில் அடைத்தனர். (ற)



இந்தியா சென்றுள்ள சீனப் பிரதமர் வென்ஜியாபோ, பெங்களூரில் கர்நாடக முதல்வர் தரம்சிங்கை சந்தித்துப் பேசினார்.

# வாத்துக்குப் பாதுகாப்பளிக்கும் அமெரிக்க இரகசியப் பொலிஸார்

(வோஷிங்டன்)

அமெரிக்க இரகசியப் பொலிஸார் வாத்து ஒன்றுக்குப் பாதுகாப்பளித்து வருகின்றனர். அதிக சத்தி வாய்ந்த மனிதராகக் கருதப்படும் அமெரிக்க அதிபருக்கு பாதுகாப்பளித்துவரும் இரகசியப் பொலிஸார் ஒரு சிறிய வாத்துக்கும் பாதுகாப்பளித்து வருகின்றனர்.

இந்தப் பெண் வாத்துக்கு டக்செனி என அவர்கள் பெயர் வைத்துள்ளனர். அமெரிக்க வெள்ளை மாளிகைக்கு அருகில் உள்ள கருவூல துறை வாசலில் இந்த வாத்து ஒன்பது முட்டைகளை இட்டு அடைகாத்து வந்தது. இதனைக் கவனித்த இரகசியப் பொலிஸார் அப்புறப்படுத்தாமல் குஞ்சுகள் பொரிக்கும்வரை அதற்குப் பாதுகாப்பளிக்க முடிவுசெய்தனர்.

தற்போது அந்த இடத்தைச்சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் டக்செனியின் முட்டைகள் குஞ்சு பொரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (ற)



என்.ஜி சி.300 என்னும் நட்சத்திரக் குடும்பத்தின் காட்சி இது. புவியிலிருந்து ஏழு ஒளியாண்டு தூரத்திலுள்ள இந்த நட்சத்திரக் கூட்டத்தை வோஷிங்டனின் கார்னெகி கல்விக் கழகத்தால் லாஸ் கம்பானாய் ஆய்வுமையத்தில் உள்ள 100 அங்குல வான்நோக்கியின் மூலம் படம் எடுக்கப்பட்டது. சுப்பர் நோவா என்று அழைக்கப்படும் நட்சத்திரங்கூட்டங்களில் ஏற்படும் பெரும் வெடிப்பு இப்படத்தில் பதிவாகியுள்ளது. இந்த நட்சத்திரக்கூட்டம் வானில் உள்ள நட்சத்திரக் கூட்டத்தைப் போல் சுருள் வடிவத்தில் உள்ளது.

# சங்கரராமன் படுகொலை வழக்கில் சிக்க வைத்ததற்கான பின்னணி என்ன?

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கில் தன்னை முதல்வர் ஜெயலலிதா சிக்க வைத்ததற்கு என்னென்ன காரணங்கள் இருக்ககூடும் என்பது தொடாபாக அனுமானங்களை அணி, அணியாய் அடுக்கி சுப்ரீம்



தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

சட்டசபையிலும் கூட என்னை ஒரு கொலையாளியாகச் சித்திரிக்கும் கருத்துக்களைத தெரிவித்திருக்கிறார்.

★ கொலை செய்யப்பட்ட சங்கரராமன் குடும்பத்தாருக்கு ஜெயலலிதா 5இலட்சம் ரூபாவை நிவாரண நிதியான கொடுத்திருக்கிறார். அடுத்த ஓரிருநாட்களில் சங்கரராமன் படுகொலை வழக்கல் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான அடையாள அணி வகுப்பு நடத்தப்பட்டது. அதில் சங்கரராமன் குடும்பத்தார் சில பேரை அடையாளம் காட்டியதாகத் தகவல்கள் வெளியாகின.

★ தமிழ்நாடு மருத்துவமனையை காஞ்சி மடத்தின் அறக்கட்டளை விலைக்கு வாங்கியது. அந்த மருத்துவமனையை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

★ தமிழகம் முழுமையும் உள்ள கோவில் கும்பாபிஷேகப் பணிகளை மேற்பார்வையிட்டு அறிவுரை வழங்கும் குழுவைத் தமிழக அரசு அமைத்து அதன் பின் என்னைத் தலைவராகவும் நியமித்திருந்தது. கடந்த 2004மே மாதம் தமிழகத்தின் பல்வேறு கோயில்களில் கும்பாபிஷேகத் திருப்பணிகள் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து பல பரிசீலனைகள் நடத்தப்பட்டன.

ஆனாலும் இந்து அறநிலைய ஆட்சித்துறை திடீர் என்று இந்த திருப்பணியை 2004 ஆகஸ்ட் மாதத்திற்கு ஒத்திவைத்தது. என் தலைமையிலான குழுவின் முடிவால் தமிழகஅரசு அதிருப்தி அடைந் திருப்பதாகவும், தெரிய வந்தது.இந்துஅறநிலைய ஆட்சித்துறை திடீரென்று இந்த திகதி மாற் றத்தை செய்ததற்குக் கார



பொலிஸார் சித்திரவதை

சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

★ எனக்கு ஆதரவாகக் கட்டுரை எழுதியவர்களை எல்லாம் விசாரணை என்ற பேரில்

கோர்ட்டில் ஜெயந்திரர் மனுத் தாக்கல் செய்திருக்கிறார்.

எனமீதான கொலைக் குற்றச் சாட்டுகள் தொடர்பான வழககுகளைத் தமிழகத்தில் உள்ள கோர்ட்டுகளில் விசாரித்தால் எனக்கு நியாயமான நீதி கிடைக [illegible] என் மீதான வழக்குகள் அனைத்தையும் வேறு மாநிலத்திலுள்ள கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிடவேண்டும் என்று கோரி சுப்ரீம் கோர்ட்டில் ஜெயேந்திரர் மனு வொன்றைத் தாக்கல் செய்திருககிறார்.

தன் மீது அடுத்தடுத்த வழக்குகள் போடப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்பது குறித்து இதுவரை கருத்தேதும் தெரிவிக்காமல் இருந்த ஜெயேந்திரர் தனது மனுவில் இது தொடர்பான தனது அனுமானங்களைத் தொகுத்துக் குறிப்பட்டு சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்திருக்கிறார்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக தமிழக அரசு தலைமைச் செயலர், டி.ஜி.பி.காஞ்சிபுரம் எஸ். பி.பிரேம்குமார், சங்கரராமன் கொலை வழக்கு தொடர்பான தலைமைப் புலனாய்வு அலுவலர் எஸ்.பி.சக்திவேல் மற்றும் ரவிசுப்பிரமணியன் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நிகா நிலை பல்கலைக்கழக அந்தஸ் தோடு கூடிய மருத் துவக் கல்லூரியையும் அது தொடர் பான மருத்துவமனையையும் உருவாக்குவது என்ற நோக்கத் தோடு இந்தத்திட்டங்கள் அரங்கேற்றப்பட்டன.

இததிட்டத்தில் நிலம, மருத்துவமனை கட்டுமான பணிகள், மருத்துவ சோதனைக் கருவிகள் இயந்திரங்கள் மற்றும் மருத்துவக்கல்லூரிக்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும் வாங்குவதற்காக 70கோடி ரூபாயை 'இந்த டிரஸ்ட் முதலீடு செய்தது. மருத்துவக் கல்லூரி தொடங்கும் பணிக்குத் தேவையான தடையின்மை சான றிதழ் பெறுவதற்காக தமிழக அரசுக்கு விண்ணப்பிக்கப்பட்டது.

அரசு தரப்பில் இருந்து இதற்கு எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. இதனையடுத்து, சென்னை ஐகோர்ட்டில், டிரஸ்ட்சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரணை ஐகோர்ட் காஞ்சிமட அறக்கட்டளையின் மனுவை பரிசீலனை செய்து தடையின்மை சான்றிதழ் வழங்குவது தொடர்பான முடிவை இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்க வேண்டும் என்று உத்

ணம என்ன என்பது கடவுளுக்கே வெளிச்சம்.

★ பழநி மலையிலுள்ள முருகன் சிலை நெடுங்காலமாக நேரடி பயன்பாட்டில் கோடிக்கணக்கான பக்த கோடிகளின் வழிபாட்டில் இருந்து வருகிறது. இதனால் அந்தத்திருமேனி வடிவம் பலவீனப்பட்டுவந்தது. எனவே பஞ்சலோக முருகன் சிலையை நிர்மாணித்து அதனை வழிபாட்டுத் தலத்தில் வைக்கலாம் என்று குழுத்தலைவர் என்ற முறையில் நான் முடிவு செய்தேன். அதன் பின்னர் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் அ.தி. மு.க.படு தோல்வியைச சந்தித்தது. இதற்குக் காரணம் பழநி மலையிலுள்ள வழிபாட்டுத் தலத்தில் வேறொரு திருமேனியை பிரதிஷ்டை செய்ததுதான் என்று பரவலாக பேசத தொடங்கினர்.

★ சங்கரராமன் படுகொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டுள்ள 25 பேரில் 14பேர் குண்டர் சட்டத் தின்கீழ் கைதாகி சிறையிலடைக்கப்பட்டனர். இவர்களெல்லாம் அடிக்கடி குற்றம் புரியக் கூடிய வாடிக்கைக் குற்றவாளிகள் என்று

செய்தனர். சோ.ராமசாமி, குருமூர்த்தி போன்றோர் இந்த வகையில் துன்புறுத்தப்பட்டனர். பிரபல இருதய அறுவைச்சிகிச்சை நிபுணர்களான டாக்டர் பாஸ்கரைகூட பொலிஸார் விட்டுவைக்கவில்லை. என் மீதான வழக்குகளை கோர்ட்டுகளில் நடத்து

## சுப்ரீம் கோட் மனுவில் ஜெயேந்திரர் திடுக்கிடும் தகவல்

வதற்கான நிதியைத் திரட்ட அவர் பொதுமக்களிடம் அறிவிப்பு வெளியட்டது தான் அவர் செய்த குற்றமாம். டாக்டர் பாஸ்கருக்குக் கூட பொலிஸார் அழைப்பாணை அனுப்ப இருந்த நிலையில் ஐகோர்ட் தலையிட்டு தான் அந்த விசாரணைதடுத்து நிறுத்தபபட்டது.இவையெல்லாம் தான் என் மீது ஜெயலலிதா கோபம் கொண்டதற்கும் என் மீதுவழக்குகள் போடுவதற்கும் காரணங்களாகஇருந் திருக்கலாம். இந்தக்காரணங்களை எல்லாம் கவனத்தில் வைத்துப் பார்த்தால் தமிழகத்தில் உள்ள கோர்ட்டுகளில் என்மதான வழக்குகளை விசாரித்தால் எனக்கு நியாயமான நீதிகிடைக்காது ஆகவே என்மீதான அனைத்து வழக்குகளையும் வேறு மாநிலத்தில் உள்ள

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்று உடற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியவர்கள் சங்கத்தில் பதிவு செய்யாதவர்கள் அனைவரையும் இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு நீராவியடி வீதியில் உள்ள பிறைற்மன் கல்வி நிலையத்துககு சமுகம் தருமாறு உடற்கலவி டிப்ளோமா பட்டதாரிகள் சங்க தலைவர் ப.தர்மகுமாரன் கேட்டுள்ளார். (7)

## பூப்பந்தாட்டபோட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டகழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட பூப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி கடந்த 6ஆம் திகதி மானிப்பாய் இந்துக்கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம் முதலாம இடத்தையும், யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுக்கழக அணி இரண்டாம் இடத்தையும், பெண்கள் பிரிவில் பல்கலைக்கழக விளையாடடுக்கழக அணி முதலாம் இடத்தையும் உடுவில் மத்திவிளை யாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன. (ந-19)

## ஜே.வி.பி-அமைச்சா சந்திப்பு இன்று

இலங்கை மின்சார சபை மற்றும் சிறீலங்கா பெற்றோலியக்கூட்டுத்தாபன மறுசீரமைப்பு விவகாரம் குறித்து இலங்கை அரசாங்கத்தினுள் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொ[illegible]வதற்காக மின்சக்தி அமைச்சர் சுசில்பிரேமஜயந்தவிற்கும் மக்கள் விடுதலை முன்னணி பிரதிநிதிகளுக்கும் இடையேயானவிசேடசந்திப்பொன்று இன்று மின்சக்தி அமைச்சில் நடைபெறவுள்ளது.

மக்கள்விடுதலை முன்னணியின்சார்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக்க அமைச்சர்கள் அனுரகுமார திஸாநாயக்க, லால்காந்தஆகியோரும் நிதியமைச்சின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர,மின்சக்தி அமைச்சின் .செயலாளர் பீ.வீரஹுந்தி ஆகியோரும் இவ் விசேட சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

## திருநாட் கொண்டாட்டவிழா

அரியாலை 86ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா சபை நடாத்தும் கலைநிகழ்வு

எஸ். பி.பிரேம்குமார், சங்கரரா மன் கொலை வழக்கு தொடர் பான தலைமைப் புலனாய்வு அலுவலர் எஸ்.பி.சக்திவேல் மற்றும் ரவிசுப்பிரமணியன் ஆகி யோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவின் சாரம் வருமாறு,

எனக்கு சுப்ரீம் கோர்ட்டில் ஜாமீன் கிடைத்த பிறகும் கூட முத லமைச்சரும், பொலிஸ் அமைச சருமான ஜெயலலிதா என்னைப் பற்றி பல்வேறு சர்ச்சைக்குரிய

ஐகோர்ட் காஞ்சிமட அறக்கட்ட ளையின் மனுவை பரிசீலனை செய்து தடையின்மை சான்றிதழ் வழங்குவது தொடர்பான முடி வை இரண்டு வாரங்களுக்குள அறிவிக்க வேண்டும் என்று உத் தரவிட்டது. ஆனாலும். இன்று வரை இந்தச்சான்றிதழ் வழங் கப்பட வில்லை. தவறான அணு குமுறை களின் மூலமாக இந்த மருத்துவமனையை எடுத்துக் கொள்ளும் நடைமுறைகள்

வழக்கில் கைதுசெய்யப்பட்டுள்ள 25 பேரில் 14பேர் குண்டர் சட் டத் தின்கீழ் கைதாகி சிறையி லடைக்கப்பட்டனர். இவர்களெல் லாம் அடிக்கடி குற்றம் புரியக் கூடிய வாடிக்கைக் குற்றவாளிகள் என்று முத்திரை குத்தி கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்களெல்லாம் ஜாமீனில் வெளிவந்து விடக் கூடாது என்ற ஒரே நோக்கத் தோடுதான் இவர்களின் ஜாமீனை கேட்கமுடி யாதபடி குண்டர்சட்டத்தின் கழ்

தால் தமிழகத்தில் உள்ள கோர்ட் டுகளில் என்மதான வழக்குகளை விசாரித்தால் எனக்கு நியாயமான நீதிகிடைக்காது ஆகவே என்மீ தான அனைத்து வழக்குகளை யும் வேறு மாநிலத்தில் உள்ள கோர்ட்டில் நடததிட உத்தரவிட வேண்டும் என ஜெயேந்திரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார். இந்தமனு மீதான விசாரணை இவ் வாரம் சுப்ரீம்கோர்ட்டில் நடைபெற வுள்ளது. (ற)

## திருநாட் கொண்டாட்டவிழா

அரியாலை 86ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா சபை நடாத்தும் கலைநிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய "அமரர் விஸ்வநாதன் அரங்கில்" மாலை 7.30மணிக்கு க.மயிவாகனம் தலைமையில் நடைபெறவுள்ளது. (க)

# 'சுனாமி' இடம்பெற்று 3மாதம் கழிந்த நிலையிலும் மக்களின் வாழ்க்கையில் மாற்றமேற்படவில்லை

## மா.க.ஈழவேந்தன் எம்.பி.சபையில் சுட்டிக்காட்டு

சுனாமி அனர்த்தம் இடம் பெற்று மூன்று மாதங்கள் உருண்டோ டிய நிலையிலும் பாதிக்கப்பட்ட மக் களுடைய அவல நிலையில் மருந்தளவு மாற்றமும் ஏற்பட வில்லை. மாறாக, உள்ளதும் கெட்ட நிலையே காணப்படுகிறது. இதற்கு மாற்றுமருந்து என்ன என்பதுதான் தற்சமயம் எழுந்துள்ள கேள்வி எனமா.க.ஈழவேந்தன் எம்.பி.சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சுனாமி அனர்த்தம் தொடர்பான விவாதத்தில் கருத்து வெளியிடு கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துரைக்கையில்,

எனக்கு முன்பு பேசிய ஹக் கீம் அவருக்கு முன்பு பேசிய ஜே. வி.பி.உறுப்பினர் சந்திரசேகரனும் ஏதோ எல்லாம் சொன்னார்கள். அவர்களுக்கு ஒரு சொல்லில் மறு மொழி கூறவேண்டின் என் கருத் தினை ஒட்டி ஆழ்ந்து சிந்திக்கும் படி வேண்டுகின்றேன்.

ஜே.வி.பி.உறுப்பினர் ஏதோ தாங்கள் தாம் தமிழ் மக்களைக் காப்பாற்ற அவதாரம் பெற்றதா கச் சொன்னார். ஜே.வி.பி.யினுடைய வெறியாட்டத்தின் விளைவு தான் அம்பாறையிலும் சரி, மற்றைய இடங்களிலும் சரி எஸ்.ரி.எவ். என்று பேசப்படுகின்ற சிறப்புப் படையின் தாக்குதல் நடைபெறு கின்றது. முகாம்களில் வாழும் தமிழ் மக்கள் படுகின்ற அல்லல் களை, இன்னல்களை வளம்மிக்க தமி ழிலேகூட எடுத்துரைக்க முடியாத அளவுக்கு ஏக்க உணர்வோடு அவர்கள் வாழ்க்கை நடாத்துகி றார்கள்.

திருகோணமலையில் மிகப் பெரிய ஆபத்து பௌத்த கோயில்களைக் கட்டியெழுப்புகின்றார்களாம்! உல கத்திற்கே தலைசிறந்ததத் துவத் தைத் தந்ததத்துவஞானி புத்த ரைக் கேவலப்படுத்துகின்ற முறை யில், எங்கெங்கெல்லாம் அழி வுக்குள்ளான இடங்கள் இருக் கின்றனவோ அங்கு எல்லாம் அந்த மக்களை அழிக்கின்ற வகையிலே சுனாமியின் பேரிலே பௌத்த கோயில்களை எழுப்புவதான எங்க ளுக்கு வருகின்ற செய்திகள் யாவும் ஆபத்துமிக்கவையாகும்.

இவ்வாறான செயற்பாடுகளால் நாம் மிகக்கவலைப்படுகின்றோம் திருகோணமலையில் இந்தக் கொடிய நிகழ்ச்சிகள் நடைபெறு கின்றன, அம்பாறையிலே நடை பெறுகின்றன. உல்லை என்ற இடத்திலே தொல்லை கொடுக் கின்ற முறையிலே புத்தர்சிலை எழுப்பப்படுகின்றது. அது இராணு வத்தின் துணையோடு அமைக்கப் படுகின்றது.

இது தேவையா, புத்தர் தனக்குக் கோயில் கட்டச் சொன் னாரா? தான் கடைப்பிடித்த உலகம் போற்றும் நெறியைக் கடைப் பிடிக்கச் சொன்னாரா? என்பது தான் நாம் விடுக்கும் கேள்வி.

ஆகவே எல்லாவற்றுக்கும் சுனாமி என்ற பெயரிலே எம்மை அழித்து ஒழிக்கின்ற சதி முயற்சி திருகோ ணமலையில் அடுத்து அம்பாறை யில் நடைபெறுகின்றது என்றால் ஏன் இந்தத் தொல்லைகளை, இந்த இன்னல்களை எமக்கு விளை விக்கின்றீர்கள் என்று நாம் கேட்க விரும்புகின் றோம்.

அடுத்து ஹக்கீமுக்கு நான் திரும்ப கூறுகின் றேன் சுற்றி வளைத்துப் பேசாதீர்கள், உங்களுக் குத் தொல்லை என்பது உல்லை யில் என்று சொல்கின்றீர்கள். நான் சொல்கின்றேன் உல்லையில் மட்டுமல்ல அம்பாறையிலும் தொல்லை உரு வாகியிருக்கின்றது. காரணம் சிங் களக் குடியேற்றம் என்பதை மும் மொழி வல்லுநர் ஹக்கீம் நன்கு அறிவார் என் றும் குறிப்பிட்டார்.

(ற)

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறுபட்டார் தொடர்பு - குறள்

வலம்புரி

## எஸ்.பி.திஸநாயக்காவால் ஐக்கியதேசியக்கட்சிக்கு ஆபத்து

நீதிமன்றத்தை அவமதித்ததன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்கா சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றார்.

இந்த நாட்டின் அமைச்சராக இருந்த ஒருவர் சிறைத்தண்டனை பெற்றிருப்பது - சாதாரண சிறைக்கைதியாக நடத்தப்படுவது போன்ற சம்பவங்கள் வித்தியாசமான உணர்நிலையைத் தரக்கூடியவையே.

எனினும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற தத்துவத்தின் பிரகாரம் நீதிமன்றத்தால் குற்றவாளியென உறுதிப்படுத்தப்பட்டால் தண்டனையை அனுபவிப்பது தவிர்க்கமுடியாதது. அந்தவகையில் பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.பி.திஸநாயக்க சிறைத்தண்டனையை அனுபவித்து வருகிறார்.

இச்சிறைத் தண்டனையை வழங்கியது நீதிமன்றம் என்பதால் அதனை விமர்சிக்கும் தைரியம் எவருக்கும் கிடையாது. அதேநேரம் நீதிமன்றத்தை அவமதித்தமை எஸ்.பியின் கர்வத்தால் ஏற்பட்டதாகும். நீதிமன்றத்தை அவமதிக்கின்ற போது அதற்குத் தண்டனை உண்டு என்பதை எஸ்.பி. அறிந் [illegible] திருந்தும் அவ்விதம் நடந்து கொண்டமைக்கு அவர் பட்டுத் தெளியட்டும் என்பது ஒரு சாராரின் கருத்து.

அதேவேளை எஸ்.பி. திஸநாயக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து ஐக்கிய தேசியக்கட்சிக்குத் தாவியவர். இந்தத் தாவலால் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு கவிழ்ந்துபோனதும் ஐக்கிய தேசியக் கட்சி அரியணை ஏறியது தெரிந்த விடயம். இவ்வாறு எஸ்.பியின் தாவலால் ஆத்திரமுற்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சந்தர்ப்பம் பார்த்து நீதிமன்றத்தினூடாகப் பழி தீர்த்துவிட்டார் என்பது மற்றைய சாராரின் கருத்து.

இருந்தும் இந்தக் கருத்து முன்னைய கருத்தைப்போன்று உயர்வுபெறாமல் காதோடுகாதாக மட்டும் ஊசலாடுகிறது. எஸ்.பிக்காக குரல் கொடுத்து நாமும் வீண்புக்கள் மாட்டிக்கொள்வானேனென்ற நிலைப்பாடே இதற்குக் காரணமாகும்.

இவ்வாறு எஸ்.பியின் சிறைத்தண்டனை தொடர்பில் இருதரப்பு வாதப்பிரதிவாதங்கள் இருக்கின்ற அதேநேரம், தனக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சி எந்தவிதமான எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்ற ஆதங்கம் எஸ்.பிக்கு உண்டு.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எஸ்.பியை தமது பக்கம் இழுப்பதில் ஜனாதிபதியின் தரப்பினர் முயற்சிக்கின்றனர். இதற்கு அவர் உடன்படுவாராயின் அவருக்கு மன்னிப்பு வழங்க ஜனாதிபதி தயாராக இருக்கின்றார் என்ற ஆசைக் கதையும் வெளியிடப்பட்டுள்ளது.

எதுவாயினும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எஸ்.பி மீது அவ்வளவாக விருப்பில்லை என்பதால் அவரை விடுதலை செய்யக்கோரி நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறமாட்டாதென்பது உறுதி. இதனை எஸ்.பி.திஸநாயக்கா தன்னளவில் உறுதிசெய்துகொள்ளும்பொழுது ஜனாதிபதியை நாடு வதும், அதிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி ஆபத்தைச் சந்திக்கப்போவதும் சுனாமி வந்த வேகத்தில் நடக்கவே செய்யும்.

# மலையகத் தமிழர்களுக்கான தீர்வும் பேச்சுக்களில் முன்வைக்கப்பட வேண்டும்

## தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையின்போது மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வும் முன்வைக்கப்படவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் இந்தக் கருத்தை முன்வைத்துள்ளனர்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி முறையின் கழ் தீர்வு காணப்படவேண்டுமென்ற கருத்து தமிழ் நாட்டுத் தலைவர்கள் மத்தியில் காணப்படுகின்றது. இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியத் தலையீடும் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கருத்தும் மேலோங்கி நிற்கிறது.

இந்த நிலையில், இனப்பிரச்சினைக்கு காணப்படும் தாவில் மலையகத் தமிழ் மக்களுக்கான தீர்வும் உள்ளடக்கப்பட்ட வேணடுமென தமிழ்நாட்டுத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எனவே, அதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி இனப்பிரச்சினைக்கான நிகழ்ச்சி நிரலில் மலையக மககளுக்கான தீர்வினையும் உள்ளடக்கும் நிலைப்பாடு தற்போது தமிழக அரசியல் அரங்கில் பேசப்பட்டு வருகின்றது. (ந-8)

# சுனாமியால் பாதிப்படைந்த சிறுவர்களின் விபரங்களைத் திரட்ட போதிய ஆதரவில்லை

(கொழும்பு)

சுனாமிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டுவதற்குப் போதுமான ஆதரவு இல்லாதிருப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிததுள்ளது.

சுனாமியினால் இடம்பெயர்ந்த சிறுவர்கள் பற்றிய உண்மை விபரங்களைத் திரட்டுவதற்கும், அவர்களை உறவினர்களிடம் ஒப்படைப்பதற்குமான பொறுப்பு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடம் இருப்பதாக சபையின தலைவர் ஹரிந்திரா சில்வா தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவ்வப்போது அவர்களினது எண்ணிக்கை மாறுபடுவதாகக் குறிப்பிட்ட அவர், இதன் காரணமாக மீண்டும் உண்மையான விபரங்களைத் திரட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட சகல பிரதேசங்களிலும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள சர்வதேச சிறுவர் கல்வி நிதியம் முன்வந்துளளது. இந்த விடயத்துக்கு அரசாங்கத்தின் நிதி மற்றும் மனித வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கு எண்ணியுள்ளோம். இது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளருடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது எனவும் மேலும் தெரிவித்தார். (ந-8)

# சிங்கள இராணுவத்தினரின் சதிவலைக்குள் தமிழ் மக்கள் சிக்கிவிட அனுமதியளியோம்!

(துன்னாலை)

தமிழ் மக்கள் [illegible] வரும் இலங்கை இராணுவத்தின் சதிவலைக்குள் அகப்பட இடமளிக்கவோ, அனுமதியளிக்கவோ மாட்டோம் என தமிழீழ விடுதலைப்புலிகளின் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன் தெரிவித்திருக்கிறார்.

கடந்த மாதம் வடமராட்சி உடுப்பிட்டிப் பகுதி இளைஞர்கள் சிலரிடையே கோஷ்டி மோதல் ஏற்படவிருந்த வேளையில் அவர்களைக் கைது செய்து விசாரணைகள் நடாத்தப்பட்டு பல புத்திமதிகளையும அறிவுறுத்தல்களையும் வழங்கி பெற்றோர்களிடம் கையளித்த போதே இன்பன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,அரசானது தமிழ் மக்கள் மீது பல்வேறு வடிவங்களில் பல்வேறு முறைகளில் அழிவுகளை ஏற்படுத்தி வருகிறது.

அத்துடன், தமிழர் கலாச்சாரத்தையும் அழிக்க திட்டமிட்டு முயற்சி செய்து வருகிறது. இந்தவகையில் இளம் சமூகத்திடம் அன்பானவர்கள் போல் உறவு வைத்து கலாச்சாரத்தை சீரழிக்கும் ஆபாசப்படங்களை வழங்கி சீரழிக்க முற்படுகிறது. அதுமட்டுமன்றி பல இடங்களில் இளைஞர்களை கோஷ்டி மோதல்களிலும் ஈடுபடச்செய்து அவர்களில் ஒரு பகுதியினருக்கு வாள்கள், கத்திகள் போன்ற ஆயுதங்களை வழங்கி அழிவுப் பாதைக்கு அரசு இட்டுச்செல்கிறது.

இவ்வாறு திட்டமிட்டு செய்யப்படும் சதிவலைக்குள் இளைஞர்கள் அகப்பட வேண்டிய பயங்கரமான நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், தலை நிமிர்ந்து உரிமையுடன் இருகக வேண்டும் என்பதற்காகவும் எமது தலைவரின் வழிகாட்டலில் நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். இன்று 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்கள் தம் தமிழ் மண்ணுக்காக தமது உயிர்களை பலிகொடுத்துள்ளார்கள். அவர்களின் கனவு நனவாக வேண்டும். இதற்காக நாம் உறுதியுடன் செயற்பட வேண்டியது அவசியமாகிறது.

இந்த நிலையில் இளைஞர்கள் இன்று தமது இனத்துக்குள்ளேயே மோதல்களில் ஈடுபட முயற்சித்துள்ளமை மிக வேதனையாகவுள்ளது. மோதல்களில் ஈடுபடும் இளைஞர்களிடம் இருந்து பல கூரிய வாள்கள் போன்ற ஆயுதங்களைக் கைப்பற்றியுளளோம்.

இவ் ஆயுதங்களை எதிரிகளுக்குப் பயன்படுத்தியிருந் தால் நாம் மிகவும் சந்தோஷப்பட்டிருப்போம். அவர்கள் விரும்பினால் எம்முடன் வரட்டும் எமது படைக்கு ஆட்கள் தேவை. போராளிக்ளாகவோ அன்றி துணைப்படையாகவோ வர விரும்பினால் வரலாம். அவர்களுக்கு ஊதியமும் நாம் வழங்குவோம். ஆனால் எமது இனத்துக்குள்ளே மோதல்களில் ஈடுபடவோ, சீரழிவுகளில் ஈடுபடவோ என்றுமே அனுமதிக்கமாட்டோம் என்று குறிபபிட்ட அவர், பிள்ளைகளின் ஒவ்வொரு பெற்றோரும் அதிக கண்ணோட்டத்துடன் இருக்க வேண்டும் என்றார்.

இதேவேளை, பிள்ளைகளை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும் இன்னொரு காரணி சினிமாப் படம் தான்.

இதைவிட வெளிநாட்டுப் பணமும் இதற்கொரு காரணியாகும். ஆகவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் இருந்து மீட்கப்பட்ட பல கூரிய வாள்களை பெற்றோர்கள் முன்னிலையில் காண்பிக்கப்பட்டது. சில பெற் றோர்கள் அவ் ஆயுதங்களைக் கண்டு ஆச்சரியமடைந்தனர்.

சிலர் தம் பிள்ளைகளின் தீய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தியமைக்கு நன்றி தெரிவித்தனர். சம்பவத்தின்போது கைது செய்யப்பட்ட 12 இளைஞர்களும் கடுமையான நிபந்தனையின் பெயரில் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். இளைஞர்களில் சிலர் மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-7101)

# ஒரு தொகுதி அடையாள அட்டைகள் வந்துசேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டைக்காக பாடசாலைகளூடாக விண்ணபபித்தோருக்கான ஒரு தொகுதி அடையாள அட்டைகள் யாழ். மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள ஆட்பதிவுத் திணைக்கள அலுவலகத்திற்கு வந்துள்ளன.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் பாடசாலைகளூடாக தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பித்த மாணவர்களுக்கான ஒரு தொகுதி அடையாள அட்டைகளே தற்போது வந்து சேர்ந்துள்ளன.

பொறுப்பான ஆசிரியர்களை வந்து இவற்றைப் பெற்றுக் கொள்ளும்படி ஆட்பதிவுத் திணைக்களத்தின் யாழ்.மாவட்டப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (ந-19)

## ஊடகவியலாளர்கள் மீதான பழிவாங்கல் நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிலருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பழிவாங்கல் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

மக்களின் அமைதி வாழ்க்கைக்குப் பங்கம் விளைவிக்கும் சம்பவங்கள் குறித்த உண்மை நிலையினைத் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளருக்கு எதிராக பழிவாங்கும் நடவடிக்கைகளும் அச்சுறுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான பழிவாங்கல் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். மேலும், இது போன்ற சம்பவங்கள் குறித்த உண்மைச் செய்திகளை பொறுப்புடன் வெளியிட வேண்டியது ஊடகவியலாளரின் கடமை எனவும் அவ் இயக்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-4)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

முக்தியை விரும்புபவர்கள் உலகை ஒரு கனவாகக் காண்கிறார்கள். நிர்க்குணப் பிரம்மத்தில் மூழ்கி அதில் ஒன்றுகிறார்கள். சகுணப் பிரம்மத்தை ஆராதிப்பவர்கள் உலகை இறைவனுடைய சக்தியின் வெளிப்பாடாகக் கருதுகிறார்கள். சத்-சித் ஆனந்தமான இறைவனுடன் இணைகிறார்கள். மீண்டும் மீண்டும் பிறப்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை.

சுவாமி விவேகானந்தர்

# இதயத்தை தாக்கும் வைரஸ் காய்ச்சலால் கண்டியில் இருவர் மரணம்

(கண்டி)

பதுளை மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இதயத்தைத் தாக்கும் வைரஸ்காய்ச்சல் மையோகார்டிரிஸ் நோய் இப்போது கண்டி மாவட்டத்திலும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டி மாவட்டத்தில் இதுவரை இந்நோய்க்கு இலக்காகி மூவர் உயிரிழந்திருப்பதாக தெரியவந்துள்ளது.

இதயத்தைத் தாக்கும் இவ்வைரஸ் காய்ச்சலான மையோகார்டிரிஸ் நோயினால் இதுவரை இருவர் பலியாகியிருப்பதை கண்டிபேரதெனியா போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சந்திரா குணதிலக்க உறுதிசெய்துள்ளார்.

மூன்றாமவரின் மரணம் மைக்யோகார்டிரிஸினால் நிகழ்ந்ததா என்பது குறித்து ஆய்வு செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். நாளாந்தம் காய்ச்சலுக்கு சிகிச்சைப் பெறுவதற்காக 10தொடக்கம் 15நோயாளர்கள் வருகின்றனர். எனினும் இவர்களிடம் மையோகார்டிரிஸ் நோய்க்கான அறிகுறிகள் தென்படவில்லை இவர்களுக்கு ஏற்பட்டிருப்பது டெங்கு காய்ச்சலா அல்லது வைரஸ் காய்ச்சலா என பரிசோதிக்கப்படுகின்றது எனவும் வைத்தியர் சந்திரா குணதிலக்க தெரிவித்தார்.

பேராதனைப் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஒருவரும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் மையோகர்டிரிஸ் நோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சையளித்த ஒரு வைத்தியரும் இரு சிற்றூழியர்களும் இந்நோயால் பாதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மரணமடைந்தவர்களில் ஒருவர் மருத்துவபீட இறுதியாண்டு மாணவனென்றும் நோயாளி ஒருவருக்கு சிகிச்சை அளிக்க முற்பட்டே இவர் நோய்க்கு இலக்கானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலை நிர்வாகம் இது குறித்து போதிய கவனம் செலுத்துவதில்லை என வைத்தியசாலை ஊழியர் விசனம் தெரிவித்துள்ளனர். (த)

## மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

(திருநெல்வேலி)

வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வறியகுடும்பங்களைச் சேர்ந்த 58பேருக்கு தமிழீழ விடுதலைப்புலிகளால் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

வெளிநாட்டில் புலம்பெயர்ந்து வாழும் தனிநபர் ஒருவரின் நிதியுதவியுடன் விடுதலைப்புலிகளினால் அவை வழங்கப்பட்டன.

வடமராட்சி அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட மகளிர்அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, வடமராட்சி சுனாமி அனர்த்த முகாமைக் குழுவின் பொறுப்பாளர் பாலையா உட்பட போராளிகள் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை வடமராட்சி கிழக்கு உடுத்துறைப்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 50மாணவர்களுக்கும் 50துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வு உடுத்துறை மகாவித்தியாலயத்தில், வித்தியாலய உப அதிபர் திருமதி தவராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்புவிருந்தினராக கலந்துகொண்ட தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளை 'வழங்கினார்.(ச-43)

## மாறிமாறி நிபந்தனை விதித்து சிகிச்சை பெற தடுத்த படையினர்

(திருகோணமலை)

திருகோணமலை பூநகரில்உள்ள விடுதலைப்புலிகளின் சோதனை நிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் காயமடைந்த தேசிய துணைப்படை வீரரை திருகோணமலை பொதுமருத்துவமனைக்கு கொண்டுசெல்ல படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு அவரின் உடல்நிலை மோசமடைந்ததையடுத்து அவரை திருகோணமலை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்

கூறி அனுமதி மறுக்கப்பட்டது.

அதன் பின்னர் கடும் இழுபறியின் பின்னர் இராணுவத்துணையின்றி அவரை கொண்டு சென்றபோது கட்டைப்பறிச்சான் இராணுவசோதனைச்சாவடியினூடாக செல்ல அனுமதி மறுக்கப்பட்டது.

காயமடைந்தவர் மாத்திரமே செல்லமுடியும் எனவும் ஆனால் அவருக்கு துணையாக போராளிகள் எவரும் செல்லமுடியாது என இராணுவத்தினரால் புதியநிபந்தனை விதிக்கப்பட்டது.

## இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையே நடாத்தப்படுகின்ற ஆண் பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டியின் இறுதி நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை இரவு 7மணிக்கு யாழ்.மத்தியகல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ற-19)

## அரசியல்....


வ்ார்த்தைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக புலிகளின் நிலைப்பாடு, சுனாமிக்கான பொதுக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து விளக்கி வருகின்றனர்.

இந்தக்குழுவில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதான செயலகப் பணிப்பாளர் நாயகம் புலித்தேவன், மகளிர் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கீதா உட்பட பலரும் சென்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் தென்னாபிரிகாவுக்குச் சென்று அங்கு அரச அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினர். (த-08)

## இந்தோனேசியாவில்....

வல் வெளியிடுகையில், இப் பூமியதிர்வினால் இலங்கைக்கு எந்த விதமான நேரடித் தாக்கமும் ஏற்படாது என்றும், சுனாமி அலைகள்



அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக்குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை தென்னாபிரிக்கா துணை ஜனாதிபதியின் ஆலோசகர் தலைமையிலான குழுவினரை சந்தித்தபோது...

## வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்த அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை

### ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ் சிங்கள புத்தாண்டை சந்தோசமாகக் கொண்டாடுவதற்கு ஏற்ற சூழ்நிலை நாட்டில் இல்லை. மக்கள் தாங்கிக்கொள்ள முடியாத அளவில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது.

தொடர்ந்து அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தி மக்களுக்கு நிவாரணங்களை வழங்கக்கூடிய செயற்திட்டம் எதுவும் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் இல்லையென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கோட்டை ஸ்ரீகோத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இக்கருத்தினைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் காலத்தில் இந்த நாட்டு மக்கள் நெருக்கடிகள், அச்சமின்றி புதுவருடத்தைக் கொண்டாடக்கூடிய சூழல் காணப்பட்டது. வாழ்க்கைச் செலவும் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. ஆனால் இன்று நிலைமை அப்படியில்லை. வாழ்க்கைச் செலவு என்றுமில்லாதளவு அதிகரித்துள்ளது.

இதேவேளை நாட்டில் நடந்து கொண்டிருந்த கொடிய யுத்தத்தை நிறுத்தி யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் கைச்சாத்திட்டு மக்களின் அச்சமும், சந்தேகமும் நீக்கப்பட ஐக்கிய தேசியக்கட்சியே வழிவகுத்தது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (த-09)

## தொ.கல்லூரி மாணவர்கள் நேற்று வகுப்பு பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தொழிநுட்பக்கல்லூரி மாணவர்கள் நேற்று வகுப்பு பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது விரிவுரைகளை ஒழுங்கான முறையில் மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு ஒழுங்கான முறையில் விரிவுரைகள் இடம் பெறவில்லை எனவும் உடனடியாக தமது விரிவுரைகள் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தினர். அனைத்துகற்கைநெறிமாணவர்களும் வெளி யேறி ன்று அதிபருக்குஎதிராக கோஷங்களை எழுப்பினர். (ச)

## சிப்பாய்....

## புலிகளின் தாக்குதலை...

உளவுத்துறையின் தகவலினையடுத்து முன்எச்சரிக்கையுடன் கடற்படைசெயற்படுவதாகவும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை 1995ம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருந்த போது புலிகளால் திருமலைத் துறை முகத்தில் நின்ற கப்பல்கள் தாக்கப்பட்டு மூன்றாம் கட்டஈழப் போர் பிரகடனம் செய்யப்பட்டதால் இம்முறையும் அப்படியான ஒரு தாக்குதல் நடக்கலாம் என எதிர்பார்த்து கடறபடை உசார்நிலையில் இருப்பதாக அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை கடற்கண்காணிப்பை கடற்படை தீவிரப்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சிலதினங்களுக்கு முன்னர் மூதூர் கடற்பரப்பில் புலிகளின் நிலைகளை நெருங்கிய கடற்படகு மீது புலிகள்தாக்குதல் நடத்தியதை தொடர்ந்தே கடற்படையினருக்கு இப்பயப்பிராந்தி ஏற்பட்டிருப்பதாக

கொண்டுசெல்ல படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு அவரின் உடல்நிலை மோசமடைந்ததையடுத்து அவரை திருகோணமலை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்வதற்கு இராணுவத்திடம் அனுமதி பெற்றுத்தருமாறு விடுதலைப்புலிகளினால் கண்காணிப்புக் குழுவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதன்போது இராணுவத்தின் வழித்துணையுடனேயே காயமடைந்தவரை கொண்டு செல்லமுடியும் எனவும் எனினும் இரவுவேளையில் கொண்டு செல்லமுடியாது எனவும் அனுமதி மறுக்கப்பட்டது.

காயமடைந்தவர் மாத்திரமே செல்லமுடியும் எனவும் ஆனால் அவருக்கு துணையாக போராளிகள் எவரும் செல்லமுடியாது என இராணுவத்தினரால் புதியநிபந்தனை விதிக்கப்பட்டது.

இரவு 10 மணிவரை படையினரால் அனுமதிவழங்கப்படாத நிலையில் மழைபெய்துகொண்டிருந்த சூழலில் மீளவும் சம்பூருக்குக் கொண்டு செல்லப்பட்டார். இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் போர்நிறுத்தக்கண் காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளார். (ச)

## இந்தோனேசியாவில்....

வல் வெளியிடுகையில், இப் பூமியதிர்வினால் இலங்கைக்கு எந்த விதமான நேரடித் தாக்கமும் ஏற்படாது என்றும், சுனாமி அலைகள் உருவாவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென்றும் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.சுஜீவ தெரிவித்தார்.

இந்தோனேசியாவில் சுனாமிக்குப் பின்னர் அடிக்கடி பூமியதிர்வுகள் ஏற்பட்டுவருவது இங்கு நோக்கத்தக்கது.

(த-08)

வலியுறுத்தினர். அனைத்துகற்கை நெறிமாணவர்களும் வெளி யேறின்று அதிபருக்குஎதிராக கோஷங்களை எழுப்பினர். (ச)

## சிப்பாய்....

படைக்கப்பட்டதாக திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன் தெரிவித்துள்ளார்.

புலிகளினால் விடுவிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் தயா ரட்ணாயக்க தெரிவித்தார்.

(த-08)

கடந்த சிலதினங்களுக்கு முன்னர் மூதூர் கடற்பரப்பில் புலிகளின் நிலைகளை நெருங்கிய கடற்படகு மீது புலிகள்தாக்குதல் நடத்தியதை தொடர்ந்தே கடற்படையினருக்கு இப்பயப்பிராந்தி ஏற்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

உளவுத்துறையின் மேற்படி எச்சரிக்கை குறித்து கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி கூறுகையில், எல்லாவற்றுக்கும் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுகிறோம் அவ்வளவுதான் என்று தெரிவித்திருக்கிறார். (ச)

யாழ்.நகரில் O/L DAY CLASS
வகுப்பிற்கு நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஒரே நிறுவனம்
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்
இன்று முதல் சிறப்பான ஆரம்பம்
O/L DAY Class பிரிவு -1
(காலை 8.30 -- 2.30 வரை)
⇨ கணித வகுப்பு மாதத்தில் 30 மணித்தியாலங்கள்
⇨ கணித பாடம் சித்தியடையாதவர்களுக்கு சனி, ஞாயிறு தினங்களில் மேலும் விசேட இலவசவகுப்பு
⇨ பிரிவு - 2 வெகுவிரைவில்
(9521)

நிரு ரீயூசன் சென்ரர்
கோண்டாவில்
O/L DAY CLASS
ஆரம்பம் 15-04-2005
(வெள்ளி-8மணி)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
இன்று முதல்
விஜய்காந், மகிமா, செந்தில் நடிப்பில்
நெறஞ்ச மனசு
கா.நே: 11.00, 2.45, 6.00 (பி.நே)

மனோகரா
மூன்றாவது வெற்றி யாழ்ப்பாணம்
பார்த்தீபன், காவேரி, மாஸ்ரர் அஸ்வின் நடித்த
கண்ணாடிப் பூக்கள்
காநேரம்: 10.30, 2.30,
06.04.2005 முதல், இரவு 6.30,9.30 இற்கு / தனுஷ், ஸ்ரீதேவி நடித்த
தேவதையை கண்டேன்

## பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை

பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை. சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் (யாழ். நகரமையத்திலிருந்து 6.கி.மீ. தூரத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டும்) 18-04-2005 திங்கட்கிழமை காலை 10மணிக்கு நேரில் வரவும்.
ஆளணி முகாமையாளர்,
வலம்புரி

குளிரூட்டப்பட்ட
நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம்


கா.நேரம்: 10.30, 02.30, 06.30, 09.30 (பு.நே)
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.